பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 15 புதன்கிழமை 01.11.2017 கதிர் 360

## ஆஸி. பிரதமர் நாளை வருகிறார்

கொழும்பு, நவ.01

ஆஸ்திரேலியப் பிரதமர் மல்கம் ரேன்புல் இலங்கைக்கான இரண்டு நாள் பயணத்தை மேற் கொண்டு நாளை வியாழக்கிழமை கொழும்பு வருகிறார்.

கொழும்பு வரும் அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்து பக்கம் 18 »

# பல்கலைக்குள் மாணவர் நுழையத் தடை தடையையும் மீறிப் போராட்டம் தொடரும்

## துணைவேந்தரின் அறிவிப்பை மீற மாணவர்கள் திட்டவட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ.01

அநுராதபுரம் சிறைச்சாலையில் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றக் கோரி யாழ்.பல்கலைக்கழகத்தை முடக்கி மாணவர்கள் மேற்கொண்டுவரும் போராட்டத்தை வலுவிழக்கச் செய்யும் வகையில் மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதற்கும், விடுதிகளில் தங்கு பக்கம் 03 »



## இரட்டை நிலைப்பாடு வேண்டாம்

### ஊழியர் சங்கம் பகிரங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.01


தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தும் போராட்டத்தில் யாரும் இரட்டை நிலைப்பாட்டை எடுக்கக் கூடாது.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

'அரசியல் கைதிகள் தொடர்பான பல்கலைக்கழக மாணவர் போராட்டமும் ஊழியர் சங் பக்கம் 18 »

# 3 கைதிகளையும் குற்றவாளிகளாக்க அரசியல் உள்நோக்கத்துடன் முயற்சி

## முதல்வர் நீதியரசர் விக்னேஸ்வரன் கவலை சந்திரிகாவைத் தலையிடக் கோருகிறார்



யாழ்ப்பாணம், நவம்பர் 01

"அநுராதபுரம் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் மூன்று தமிழ் அரசியல் கைதிகளையும் குற்றவாளிகளாகக் காண வேண்டிய தேவை அரசுக்கு இருப்பதுபோல் தெரிகிறது. ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் மட்டும் அவர்களை குற்றவாளிகளாகக்காணும் உள்நோக்கத்துடன் விடயங்கள் நகர்த்தப்படுவதாகத் தோன்றுகின்றது."



இவ்வாறு கவலையுடன் சுட்டிக் காட்டியுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

இந்தக் கைதிகள் விடயத்தில் தலையிடுமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்குத் தாம் அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பக்கம் 18 »

## சந்திரிகாவுக்கு விக்கி எழுதிய கடிதத்துக்கு 2 வாரங்களாகியும் பதில் ஏதுமில்லையாம்!

யாழ்ப்பாணம், நவ.01

சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் மூன்று கைதிகளின் நிலைமை தொடர்பில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்துக்குமான தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவுக்கு, வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் எழுதிய கடிதத்துக்கு இரண்டு வாரங்களாகியும் பதில் கிடைக்கவில்லையாம்!

அதையடுத்தே அந்தக் கடிதத்தைப் பகிரங்கப்படுத்த முதல்வர் விக்னேஸ்வரன் தீர்மானித்தார் எனக் பக்கம் 18 »

## அநுராதபுரம் நீதிமன்றின் போக்கை அம்பலப்படுத்துகிறார் நீதியரசர் விக்கி

யாழ்ப்பாணம், நவ.01

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டுமே வைத்து பலரைக் குற்றவாளிகளாகக் கண்டிருக்கின்றது அநுராதபுரம் நீதிமன்றம்."

– இவ்வாறு அந்த நீதிமன்றத்தின் போக்கைத் தோலுரித்துக் காட்டியிருக்கின்றார் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எழுதிய கடிதத்திலேயே அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். பக்கம் 18 »

## அ'புரக் கைதிகளின் மீளாய்வு மனு இன்று மேன்முறையீட்டு மன்றத்தில்!

### அதற்கான நகர்த்தல் விண்ணப்பம் நேற்றுத் தாக்கல்

கொழும்பு, நவ. 01

தங்களின் வழக்குகளை மீண்டும் வவுனியா மேல் நீதிமன்றத்துக்கு மாற்றும்படி கோரி அநுராதபுரம் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் மூன்று தமிழ் அரசியல் கைதிகளினதும் மீளாய்வு மனு பெரும்பாலும் இன்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மனுவை இன்று நீதி மன்றத்தில் எடுத்துக் கொள்ளக் பக்கம் 18 »

## பனை, தென்னையில் கள் சீவத் தடை இல்லை; பிரதமருடன் பேசி டக்ளஸ் உரிய நடவடிக்கை



யாழ்ப்பாணம், நவ.01

பனை மற்றும் தென்னை மரங்களிலிருந்து கள் இறக்குவது தடை என்ற ரீதியில் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றநிலையில், இவ்விடயத்துடன் தொடர்பான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 52ஆவது அத்தியாயத்தின் திருத்தமானது, தவறானதாக அமைந்திருந்த நிலையில் அதில் மாற்றம் கொண்டுவருமாறு டக்ளஸ் தேவானந்தா எம்.பி. விடுத்திருந்த வேண்டுகோளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் இணக்கம் தெரிவித்துள்ளனர். பக்கம் 18 »

# புதிய அரசமைப்பை கொண்டு வர முயற்சிப்பவர்கள் சமாதானத்துக்கு எதிராக கோஷம் எழுப்பியவர்களே!

கொழும்பு, நவ. 01

இலங்கையில் சமாதானத்தை கொண்டுவர முடியாது என கோஷம் எழுப்பியவர்கள், தற்போது புதிய அரசமைப்பை கொண்டு வர முயற்சிக்கின்றனர் என கோட்டாபய தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதில் ஆர்வம் காட்டுகின்றனர் என்றும் கோட்டாபய குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற எலிய அமைப்பின் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் அரசை அச்சுறுத்தும் உள்ளூர் மற்றும் சர்வதேச குழுக்களே புதிய அரசமைப் கொண்டுவரும் நடவடிக்கைகயை ஆரம்பித்தவர்களாவர். ஒரு புதிய அரசமைப்பைக் கொண்டுவரும் முயற்சியானது, பிரிவினை வாதிகளின் தேவைக்காகவே தவிர, பொது மக்களின் தேவைக்காக அல்ல.



கோட்டாபய ராஜபக்ஷ கூறுகிறார்

புதிய அரசமைப்பு வேண்டாம் என்பதே எலிய அமைப்பின் கருத்தாகும். எங்களுடையது இனவாத அமைப்பு அல்ல, ஆனால் நாட்டை நேசிக்கும் அனைத்து தேச பற்றுள்ளவர்களும், அறிவாளிகளும் ஒன்றாக சேர்ந்துள்ளனர். எங்கள் அமைப்பில் இனவாதம் கொண்டவர்கள் இல்லை.

பல்வேறு அரசுகளின் போது நாட்டில் யுத்த சூழ்நிலை காணப்பட்டது. போரை ஒரு போதும் தோற்கடிக்க முடியாதெனவும், சமாதானத்தை நிறுவ முடியாதெனக் கருத்துக்களை பரப்புகின்ற குழுக்களும் இருந்தது.

புதிய அரசமைப்பைக் கொண்டு வரும் முன்னணியில் இருக்கும் குழுக்களே அவை.

வடக்கில் தமிழ் இனத்தவர்கள் 38 சதவீதம் மட்டுமே உள்ளனர், மற்றவர்கள் சிங்கள மக்களிடையே நாட்டிலுள்ள ஏனைய பகுதிகளில் வாழ்கின்றனர்.

புதிய அரசமைப்பில் உள்ளடங்கிய விடயங்களைவிரிவாக விளக்க வேண்டியது அவசியமாக உள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தது.

சுதந்திரமாக தேர்தல்களை நடத்துவதற்கு அவர்களுக்கு உதவும் வகையில் எங்கள் பகுதிகள் தளர்த்தப்பட வேண்டும் என அவர்கள் விரும்பினார்கள். நாங்கள் அதை செய்தோம். சாதாரண தமிழ் மக்களின் தேவைகள் பிரிவினைவாதிகளின் விடயங்களுக்கு முக்கியமானவை.

யுத்தத்தின் போதும் வடக்கிலுள்ள பல தமிழ் மாணவர்கள் ருஹுனு பல்கலைக்கழகத்தில் படிப்படியாக எந்தவித குறுக்கீடும் இல்லாமல் கற்கை நடவடிக்கைகளை தொடர்ந்தனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 250 ஆவது நாளையும் கடந்தும் தொடருகிறது காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டம்!



வவுனியாவில் கவனவீர்ப்பு ஊர்வலம்

வவுனியா, நவ. 01

தாயகப் பிரதேசத்தில் கையளிக்கப்பட்டும், கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடியறியும் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கவனவீர்ப்பு போராட்டம் நேற்று இடம்பெற் றது.

வவுனியா ஏ9 வீதியில் கடந்த 250 நாட்களாக நடந்து வரும் தமது போராட்டத்தை அரசோ, தமிழ் தலைமைகளோ கருத்தில் கொள்ளாத நிலை காணப்படுகின்றது. எனவே சர்வதேசமும், புலம்பெயர் சமூகமும் இதில் தலையிட்டு தமது பிள்ளைகளை மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வலியுறுத்தி இவ்வூர்வலத்தை நடத்தியிருந்தனர்.

வவுனியா கந்தசுவாமி கோவிலில் இருந்து ஆரம்பமாகி மணிக் கூட்டுக் கோபுர சந்தியை வந்தடைந்து கண்டி வீதி ஊடாக போராட்டம் இடம்பெற்ற இடத்தினை வந்தடைந்தனர்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்தின் வருகையை எதிர்பார்த்து தர்மார்தவம் என்ற தொனிப் பொருளில் பாதாதைகளை ஏந்தியவாறு ஊர்வலத்தில் ஈடுபட்டிருந்தனர். (க-100)

## அனைத்து முதலமைச்சர்களின் ஆலோசனைகள் அரசமைப்பு குழுவின் அறிக்கையில் உள்ளடக்கம்!

பிளவுபடாத மற்றும் பிரிக்கமுடியாத நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாத்து அரசமைப்பு ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டுள்ளன என நாடாளு மன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்கிரம ரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள், வடக்கு மற்றும் தெற்கிலுள்ள அனைத்து முதலமைச்சர்களின் ஆலோசனைகள் இந்த அரசமைப்புக் குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் நடவடிக்கை குழுவின் அறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதத்தின் போது நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.




ஜயம்பதி விக்கிரமரத்ன எம்.பி. தெரிவிப்பு

வெற்றிகரமான மற்றும் வலுவான நாட்டின் தேவையான புதிய அரசமைப்பை நாட்டுக்கு வழங்கும் அடிப்படையில் ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி , முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எதிர்க்கட்சியில் உள்ள மக்கள் விடுதலை முன்னணி , இலங்கை கம்யூனிஸ் கட்சி இதற்கு பங்களிப்புச் செய்து வருகின்றமை முக்கியமான நிகழ்வென்று அவர் சுட்டிக்காட்டினார்.

அரசமைப்பில் மாற்றத்தை மேற்கொள்ளும் ஆற்றல் மத்திக்கு இல்லை ஆயினும் அரசியல் பேரவைக்கு அதிகாரம் இருக்கும் பொழுது அதனை ஒற்றை ஆட்சி எண்ணக்கருவாக ஏற்றுக் கொள்ள முடியும் என்று உயர் நீதிமன்றம் உறுதிசெய்திருக்கின்றது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன இதன்போது தெரிவித்துள்ளார்.

## உள்ளூர் தயாரிப்பில் மேல்மாகாணம் கூடிய பங்களிப்பு!




இலங்கையின் மொத்த உள்ளூர் உற்பத்தித் தயாரிப்பில் மேல்மாகாணம் தொடர்ந்து ஆகக்கூடிய பங்களிப்பைச் செய்து வருகினறது.

2015 ஆம் ஆண்டில் இருந்து இந்த பங்களிப்பை மேல் மாகாணம் வழங்கி வருகின்றது. மாகாண உள்ளூர் தயாரிப்புதொடர்பானஇலங்கை மத்திய வங்கியின் புள்ளி விவர தகவல்களுக்கு அமைவாக இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு தேசிய மொத்த உற்பத்தி 11.839 ரில்லியன் ரூபாக்களாகவும் இக்கால பகுதியின் வளர்ச்சி வீதம் 8.11 சதவீதமாகும்.

தனிநபர் வருமானம் 3ஆயிரத்து 835 அமெரிக்க டொலர்களாக மதிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக மேல்மாகாண தேசிய மொத்த உற்பத்தியில் 4.697 ரில்லியன் ரூபா பங்களிப்புச் செய்தது.

இரண்டாம் மூன்றாம் இடங்களில் வடமேற்கு மற்றும் மத்திய மாகாணங்கள் இடம் பெற்றுள்ளன. வட மேற்கு மாகாணம் 1.262 ரில்லியன் ரூபாவாகவும் (10.7 சதவீதம்) மத்திய மாகாணம் 1.248 ரில்லியன் ரூபாவாகவும் (10.5சதவீதம்) பங்களிப்புச் செய்துள்ளது.

## கடற்படைத் தளபதியைச் சந்தித்தார் இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகர்!



இலங்கையில் உள்ள இலங்கைக்கான இந்திய தூதுவராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் அசோக் ராவ் கடற்படைத்தளபதி ரியர் அட்மிரல் எஸ். எஸ். ரணசிங்கவை சந்தித்துள்ளார்.

கடற்படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது இலங்கையின் 22 ஆவது கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள ரியர் அட்மிரல் எஸ்.எஸ்.ரணசிங்கவிற்கு தனது நல்வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இதன் பின்னர் இருவரும் இரு தரப்பு முக்கிய விடயங் கள் குறித்து கலந்துரையாடினர். இந்த நிகழ்வை நினைவு கூரும் வகையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

# இரு அரசியல் கைதிகள் வைத்தியசாலைகளில்

## உண்ணாவிரதம் தொடரும் எனவும் அறிவிப்பு

கொழும்பு, நவ.01

உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகளின் நிலை மோசமடைந்துவரும்நிலையில் போராட்டத்தைத் தொடர்வதென்ற முடிவில் உறுதியுடன் உள்ளதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

உண்ணாவிரதமிருக்கும் அரசியல்கைதிகளுள்ஒருவரான திருவருள்மயக்கமடைந்தநிலையில் அனுராதபுரம் அரசினர் பொது வைத்தியசாலையில் நேற்றிரவு சேர்க்கப்பட்டுள்ளார். மற்றொரு அரசியல் கைதியான தர்சன்நேற்றிரவு சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதனிடையே அரசியல் கைதிகளின் வழக்குகளை வவுனியாவிலிருந்து அனுராதபுரத்திற்கு மாற்றுவதற்கு எதிராகத் தாக்கல்செய்யப்பட்டமேன்முறையீட்டு வழக்கு இன்று மீண்டும் எடுத்துக்கொள்ளப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ் அரசியல்கைதிகளின் வழக்கை அனுராதபுரத்திற்கு மாற்றுவதற்கு எதிராகத்தாக்கல் செய்தவழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட விருந்தபோதும், அரசியல்கைதிகள் சார்பில் முன்னிலையாக விருந்த சட்டத்தரணி வராமையால், வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கை அனுராதபுரத்திற்கு மாற்றுவதற்கு எதிராகப் பரவலான போராட்டங்கள் நடந்து வந்தநிலையில், வடக்குமாகாண சபைஉறுப்பினர்சிவாஜிலிங்கம் அரசியல்கைதிகளின்உறவினர்களை அழைத்துசென்றுஜனாதிபதியைச் சந்தித்தார். பேச்சின் மூலம் பிரச்சினையைத்தீர்க்கப் போவதாக அறிவித்து, அவர் விடயத்தைக்கையாளத்தொடங்கினார்.

அரசியல்கைதிகள் சார்பில் சட்டத்தரணி இரட்ணவேல் முன்னிலையாகிவந்த நிலையில், அவரைத் தவிர்த்து சிங்களச் சட்டத்தரணியொருவர் மூலம், கைதிகளின்வழக்கை இடமாற்றத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்தவழக்குவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, கைதிகள் சார்பில் சட்டத்தரணி முன்னிலையாகவில்லை. இதனால் வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாவீரர் தின ஏற்பாடுகள் தாயகத்தில் மும்முரம்

யாழ்ப்பாணம், நவ.01

எதிர்வரும் நவம்பர் மாதம் 27ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள மாவீரர் தினத்துக்கான ஏற்பாடுகள் தமிழர் தாயகப் பிரதேசத்தில் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

வடக்கில் கிளிநொச்சியிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் நேற்று முன்தினம் முதல் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பது தொடர்பான கலந்துரையாடல்களும் இடம்பெறுகின்றன.

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஆட்காட்டிவெளி, பெரிய பண்டிவிரிச்சான் ஆகிய இரண்டு மாவீரர் துயிலுமில்லங்களில் நினைவு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதோடு, மாவீரர்களின் பெற்றோர்கள், முன்னாள் போராளிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை ஒருங்கிணைத்துமாவீரர்செயற்பாட்டுக்குழுவொன்றை எதிர்வரும் சனிக்கிழமை நிறுவவுள்ளதாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இம்முறை மாவீரர் வாரத்தைப் பெரும் எடுப்பில் அனுஷ்டிப்பதற்கான பல்வேறு முன்னெடுப்புக்களில் பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சமூக மட்ட நிறுவனங்கள் அதிக ஆர்வம் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் வர்த்தமானி இன்று கைச்சாத்தாகும்

புதியதேர்தல்முறையின்கீழ் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவிப்புஇன்றுகைச்சாத்திடப்படவுள்ளது.

மாகாணசபை மற்றும் உள்ளூராட்சிஅமைச்சர் பைசர் முஸ்தபா இன்று முற்பகல் 11 மணிக்கு அமைச்சில் இந்த வர்த்தமானியில் கையெழுத்திடவுள்ளார்.

வர்த்தமானி அறிவிப்பு கையெழுத்திட்ட பின்னர் உள்ளூராட்சி தேர்தல் நடைபெறும் முறை குறித்து ஊடகங்களுக்கு அமைச்சர் விளக்கமளிப்பார்.

# வித்தியா வழக்கின் நிரபராதி தொடர்ந்தும் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், நவ.01

வித்தியா படுகொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டு பிறிதொரு வழக்கில் மீண்டும் கைதாகிய நபரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.எம். றியாஸ் நேற்று உத்தரவிட்டார். இந்த வழக்கில் சந்தேக நபருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து ஆராய்வதற்கு யாழ்.மேல்நீதிமன்றத்தின் ட்ரயல்அட்பார்தீர்ப்பாயத்தின் சாட்சிப் பதிவைப் பெறுமாறு பொலிஸாருக்குஏற்கனவே உத்தரவிடப்பட்டிருந்தது.

அதற்கமைய அந்தச்சாட்சிப் பதிவு கிடைத்துள்ளதாகவும், அதில்சந்தேகநபருக்குஎதிரான குற்றச்சாட்டுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தரின் பெயர் குறிப்பிடப்படவில்லை எனவும்பொலிஸார் மன்றுக்கு அறிவித்துள்ளனர்.

அதற்கமைய, இந்த வழக்கு விசாரணை தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, யாழ். மேல் நீதிமன்றத்திடம் பெறப்பட்ட சாட்சிப்பதிவுக் கோவையின் பிரதியொன்றைபெற்றுக்கொள்வதற்கானஅனுமதியைப்பொலிஸார் நேற்றுக் கோரியுள்ளனர்.

வல்லுறவு மற்றும் கொலை வழக்கின் சாட்சியாளரை அச்சுறுத்தியதாகக் குறித்த நபருக்குஎதிராகக்குற்றம்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்கள் ஒருபோதும் தனிநாடு கேட்கவில்லை

## சபையில் கூறினார் சிறிதரன் எம்.பி.

தமிழ் மக்கள் ஒருபோதும் தனிநாடு கேட்டுப் போராடவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை தொடர்பாக நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய சிறிதரன், நல்லாட்சி அரசின் செயற்பாடுகளை வரவேற்றார்.

புதிய அரசமைப்பில் பௌத்த சமயத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டாலும் அதனால் பிரச்சினைஎதுவும்இல்லை என்றும் அவர் கூறினார்.

இடைக்கால அறிக்கையில் முன்னேற்றகரமான அம்சங்கள்இருப்பதாகவும்அவர்சுட்டிக்காட்டினார். முதற்தடவையாகத் தமிழ்மக்களின்ஆதரவுடன்புதிய அரசமைப்புக்கானஇடைக்கால அறிக்கை வெளியாகியுள்ளது என்றும் சிறிதரன், தனது உரையில் குறிப்பிட்டார்.

## பல்கலைக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கும் கால வரையறையற்ற தடையை யாழ்.பல்கலைக் கழகம் பிறப்பித்துள்ளது.

இதேவேளை, யார் தடை விதித்தாலும்தாம் முன்வைத்தநியாயமான கோரிக்கைகளை அரசு நிறைவேற்றும் வரை தமது போராட்டம்தொடரும் எனயாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

வவுனியா நீதிமன்றத்தில் இருந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகள், வவுனியாநீதிமன்றில்விசாரணைக்காக திகதியிடப்பட்டிருந்த நிலையில், அந்த வழக்குகளைச் சட்டமா அதிபர் சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் உள்ளதாகக் கூறி அநுராதபுரம் நீதிமன்றுக்கு மாற்றியிருந்தார்.

இவ்வாறு மாற்றப்பட்ட தமது வழக்குகளை மீண்டும் வவுனியாமேல்நீதிமன்றுக்கு மாற்ற வேண்டும் என வலியுறுத்தி அந்த மூன்று அரசியல் கைதிகளும் தொடர் உண்ணாவிரத போராட்டத்தைமுன்னெடுத்துள்ளனர். இவர்களது போராட்டத்துக்கு ஆதரவளித்து பல்வேறு தரப்பினரும் மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்களை மேற்கொண்டுள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் உண்ணாவிரதப் போராட்டமொன்றைஆரம்பித்திருந்தனர். இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் ஜனாதிபதியுடன் சந்திப்பொன்றைஏற்படுத்தி இதனைத் தீர்த்து வைப்பதற்காக யாழ். பல்கலைக்கழக மாணவர்களைக் கொழும்புக்கு அழைத்துச்சென்றிருந்தார்.

இதன்படி ஜனாதிபதியுடன் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பில்அரசியல்கைதிகளின் உண்ணாவிரதப்போராட்டத்தை நிறுத்தி அவர்களது கோரிக்கை தொடர்பில் சாதகமான முடிவொன்றைக் கடந்த 25ஆம் திகதி வழங்குவதாக ஜனாதிபதி பல்கலை மாணவர்களிடம் உறுதியளித்திருந்தார்.

ஜனாதிபதியுடனான இந்தச் சந்திப்பில் திருப்தியடையாத யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஜனாதிபதி கோரிய காலப்பகுதிக்குள் தீர்வு முன்வைக்கப்படும் வரை தமது கற்றல்செயற்பாடுகள்அனைத்தையும் புறக்கணிப்பதாக அறிவித்திருந்தனர்.

அத்துடன் அந்தக் காலப் பகுதியில்அரசியல்கைதிகளின் விடுதலையை வலியுறுத்திக் கிழக்குப்பல்கலைக்கழக மாணவர்களையும் இணைத்துப் பெரும் கையெழுத்துப் போராட்டத்தை யும் மேற்கொண்டிருந்தனர்.

எனினும் கடந்த 25ஆம் திகதி ஜனாதிபதி, தான் உறுதியளித்ததற்கு அமைவாக தீர்வு எதனையும் அறிவிக்கவில்லை.

அதனைத்தொடர்ந்துஅமைச்சர் சுவாமிநாதன், சட்டமா அதிபருக்கும் நீதியமைச்சருக்கும் இடையில்முக்கியசந்திப்பொன்று நடைபெறவுள்ளது எனவும் அதன் முடிவில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தப் பிரச்சினை தொடர்பாகச் சாதகமான முடிவொன்றைப் பெற்றுத் தருவார் எனவும் மாணவர்களுக்கு உறுதியளித்திருந்தார்.

இவ்வாறான நிலையில் யாழ்.பல்கலைகழக மாணவர்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட இரண்டு உறுதிமொழிகளும்நிறைவேற்றப்படாதநிலையிலேயேநேற்றுமுன்தினம்அவர்கள்யாழ்.பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் அனைத்துச் செயற்பாடுகளையும் முடக்கிப் போராட்டத்தை முன்னெடுத்ததுடன் இரண்டாவது நாளாகவும் நேற்றுக் கொட்டும் மழைக்கும் மத்தியில் போராட்டத்தை முன்னெடுத்திருந்தது.

நேற்றைய தினமும் காலை மழை கொட்டிக் கொண்டிருந்த போதும்யாழ்.பல்கலைக்கழகத்தின்பிரதான வாயிலுக்குநேராகவும், பல்கலைக்கழகத்தின் வெளிப் பகுதியிலும் கொட்டகைகளை அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தப் போராட்டம் இடம் பெற்றுக் கொண்டிருந்த போது பிற்பகல்ஒரு மணியளவில், பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரன சூழ்நிலைகளால் மூன்று பீடங்களினதும் கற்றல் செயற்பாடுகளை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்படுவதாகவும், மாணவர்கள் விடுதிகளில் இருந்து வெளியேற வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்தத் தடை தொடர்பாகப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்பேராசிரியர்ஆர்.விக்கினேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில்–

மாணவர்கள் இரண்டாவது நாளாகவும் நிர்வாகத்தை முடக்கிப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இதுதொடர்பாக எமக்கு எந்தவிதமான அறிவித்தல்களையும் அவர்கள் தெரிவிக்கவில்லை. எனினும் நாம் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணிவரை இது குறித்துக் கலந்துரையாடியிருந்தோம்.

நிர்வாகத்தை முடக்கினால் என்ன பாதிப்பு ஏற்படும்? அதற்காக நிர்வாகத்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பது தொடர்பில் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தியிருந்தோம். ஏனைய மாணவர்களுடன்பேசிவிட்டுத் தாம் முடிவை அறிவிப்பதாக அவர்கள் கூறினார்கள். ஆனால் அது தொடர்பாக எந்த விதமான முடிவையும் இதுவரை அறிவிக்காது தொடர்ந்து நிர்வாகத்தை முடக்கிப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்கள்.

ஆகவேதான் நாம் இந்த நடவடிக்கை எடுத்தோம். நாம் இந்த நடவடிக்கை எடுத்திருக்காவிட்டால் இதற்கு மேலான நடவடிக்கையை உயர்மட்டத்தில் எடுத்திருப்பார்கள்.

இதன்படி யாழ்.பல்கலைக்கழகத்தின்விஞ்ஞான, முகாமைத்துவ மற்றும் கலைப்பீட மாணவர்கள் மறு அறிவித்தல் வரை யாழ்.பல்கலைகழக பிரதான வளாகத்துக்குள் நுழைவதற்கும், விடுதிகளில்தங்குவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக விடுதிகளில் உள்ள மாணவர்கள் இன்று மாலை 4 மணிக்கு முன்னதாக வெளியேற வேண்டும்.

பல்கலைக்கழக நிர்வாகத்தை இயங்கவிட்டால் அரசியல் கைதிகளின் விடயத்தில் தாம்முன்னெடுத்துள்ளபோராட்டம்தோல்வியடைந்துவிடும் என மாணவர்கள் நினைக்கின்றார்கள். நாம் இப்போது தடை விதித்துள்ள நிலையில் எல்லா மாணவர்களும் சென்று விடுவார்கள். அதன் பின்னர் பத்து மாணவர்களே இந்தப் போராட்டத்தில் நிற்பார்கள் எனத் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகமாணவர்ஒன்றியத்தலைவர்கிருஸ்ணமேனன் மற்றும் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் அனுராஜ்ஆகியோர்போராட்டம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையில்–

யார்எத்தகையதடைகளைப் போட்டாலும் எமது போராட்டமானதுதொடர்ச்சியாகஇடம்பெறும். எமது போராட்டத்திற்குப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களைச் சேர்ந்த மாணவர்களும் பூரண ஆதரவு தருவதாகக் கூறியுள்ளார்கள்.

எமது போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

எமது போராட்டத்துடன் பத்தொன்பது அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் இணைந்து கொள்வர்கள். இந்தப்போராட்டத்திற்குஅனைத்துப்பொதுஅமைப்புக்களும், பொதுமக்களும் ஏனைய தொழிநுட்ப பீட, கல்வியல் பீடங்களும் ஆதரவை வழங்கி போராட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டும். – என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மக்கள் வழங்கிய ஆணையில் தலையிடும் பௌத்த பீடங்கள்!

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான முயற்சிகள் பாதிக் கிணறு தாண்டும் நிலையை எட்டிவிட்டன.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைக் குழு தனது பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து - 'மரதன்' அமர்வுகளை நடத்தி - இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்துவிட்டது.

அரசமைப்பு சபையாகக் கூடியிருக்கும் நாடாளுமன்றம், நேற்று முன்தினம் முதல் இன்று வரை தொடர்ந்து மூன்று நாள்களாக இந்த இடைக்கால அறிக்கையை ஒட்டி விவாதித்து வருகின்றது.

இனி, இந்த விவாதத்தில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் அரசமைப்பு நகல் ஒன்றைத் தயாரித்து புதிய அரசமைப்புக்கான சட்டமூலமாக அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான பணியை நடவடிக்கைக் குழு எடுக்க வேண்டி இருக்கும்.

அந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கினரது ஆதரவோடும் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியோடும் நிறைவேற்றினால்தான் புதிய அரசமைப்பு சட்ட வலுப் பெறும்; இருக்கும் அரசமைப்பு செயலிழக்கும்.

ஆனால், அந்த முயற்சிகளுக்கு எதிராகப் பௌத்த, சிங்களப் பேரினவாதமும் மேலாதிக்கமும் உருக்கொண்டு கிளம்பத் தொடங்கி விட்டன என்பது துலாம்பரமாக வெளிப்படுகின்றது.

குறிப்பாக, பௌத்த மத பீடங்கள் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கிவிட்டன.

ஏற்கனவே புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியை அஸ்கிரிய மல்வத்த மகாநாயக்கர்களும், அவர்களது பீடங்களும் எதிர்க்கின்றன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இப்போது அமரபுர மகா நாயக்கர்கள் தங்களின் கருத்தை விசேட ஊடக அறிக்கை மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

புதிய அரசமைப்பை உருவாக்குவதைத் தவிர்த்து, உள்ள அரசமைப்பில் போதிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அவர்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமரை அந்த அறிக்கை மூலம் வேண்டியிருக்கின்றார்கள் என்று கூறப்படுகின்றது.

மகாநாயக்கர்களின் இந்த அரசியல் தலையீட்டுக் கருத்துக்கு மிகுந்த முக்கியத்துவமும் முன்னுரிமையும் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் அப்படிக் கூறிவிட்டமையால் இனி புதிய அரசமைப்பைக் கொண்டுவரக் கூடாது என்ற பிரசாரமும் இப்போது தெற்கில் தீவிரப்படுத்தப்படுகின்றது.

ஆனால், மகாநாயக்கர்களின் இந்த அரசியல் தலையீடு - ஆதிக்கம் - தேர்தல்மூலம் மக்கள் அளித்த ஆணைக்கு சாவுமணி அடிக்கும் ஜனநாயக விரோத நடவடிக்கை என்பதை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் - 2015 ஜனவரி 15இல் - 97வீதமான மக்கள் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு ஆணை தந்திருக்கின்றார்கள் என்பதை விளக்கிய சுமந்திரன், அதை நிறைவேற்ற மறுக்கின்றமை - மக்களின் அந்த ஆணையைச் செய்ய விடாமல் தடுப்பது - பெரும் ஜனநாயக விரோத நடவடிக்கை என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

நேற்றுமுன்தினம் அரசமைப்புச் சபையாக நாடாளுமன்றம் கூடிய போது, அங்கு இடைக்கால அறிக்கை மீதான விவாதத்தின் ஆரம்பத்தில் சுமந்திரன் ஆதாரங்களோடு - புள்ளிவிவரங்களோடு - அதைச் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்தல், தேர்தல் நடைமுறைகளைச் சீரமைத்தல், அதிகாரப்பகிர்வு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணல் ஆகிய மூன்று விடயங்களை உள்ளடக்கியதான புதிய அரசமைப்பை உருவாக்குவேன் என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தை முன் நிறுத்தியே பொது எதிரணியின் வேட்பாளராக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கினார் மைத்திரிபால சிறிசேன.

அதுபோலவே அப்போது அதிகாரத்தில் இருக்கும் ஜனாதிபதியாகத் தேர்தலை எதிர்கொண்ட மஹிந்த ராஜபக்ஷவும் அதுவரை 36 ஆண்டுகள் மக்கள் மீதும் நாட்டின் மீதும் திணிக்கப்பட்டிருக்கும் தற்போதைய அரசமைப்பைத் தாம் மீண்டும் ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்தில் முழுதாக மாற்றுவேன் என்றே தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரகடனப்படுத்தியிருக்கிறார். இருக்கும் அரசமைப்புக்குத் துண்டு துண்டாகத் திருத்தங்களைக் கொண்டு வருகின்றமையை விடுத்து, அதனை அடியோடு புதிதாக மாற்றுவேன் என்றுதான் அவர் தனது தேர்தல் பிரகடனத்தில் குறிப்பிட்டார்.

இவ்வாறு தாங்கள் ஆட்சிக்கு வந்தால் புதிய அரசமைப்பை உருவாக்குவோம் என்று கூறிய இரு பிரதான வேட்பாளர்களுக்குமே நாட்டின் 97 வீதமான மக்கள் வாக்களித்தனர்.

ஆகவே, இப்போதைய அரசமைப்பை முழுதாக மாற்றியமைப்பது என்பது நாட்டின் 97 வீத மக்களால் ஆணை தந்து அங்கீகரிக்கப்பட்ட விடயம்.

அதை பௌத்த மகாசங்கத்தினரோ, மற்றைய தரப்பினரோ குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகத் தடுக்க முனைகின்றமை நாட்டு மக்களின் ஆணையில் தலையிடும் விடயம் அன்றி வேறில்லை என சுமந்திரன் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியமை முற்றிலும் சரியானதுதான்.

## அநாதரவாக வீதியில் விடப்பட்ட தந்தைக்கு பிள்ளையாக மாறினார் பொலிஸ் அதிகாரி!

அநுராதபுரத்தில் பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் முதியவர் ஒருவரை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இரவு வேளையில் யாரோ ஒருவர் முதியவரை வீதியில் விட்டுச் சென்றுள்ளார் என்று அநுராதபுரம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸ் அதிகாரிகள், வயதான நபரை மீட்டுள்ளனர்.

அந்த நபருக்கு உணவு வழங்கி, சிகிச்சைக்காக அவரை வைத்தியசாலையில் சேர்த்தார் அந்த பொலிஸ் அதிகாரி.

அவர் 76 வயதுடையவர் எனவும், வெலிகம, கப்பரதொட்ட பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை எனவும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

அந்த இடத்திற்கு தான் எவ்வாறு வந்தார் என்பது தனக்கு நினைவில்லை என வயோதிபத் தந்தை குறிப்பிட்டுள்ளார்.

முதியவர் தெருவில் கிடந்த போதும், அவரை வைத்தியசாலையில் சேர்க்க எவரும் விரும்பவில்லை எனக் குற்றச்சாட்டப்பட்டுள்ளது.

பெற்றோரை வீதியில் பிள்ளைகள் விட்டு செல்லும் நிலையில் பொலிஸ் அதிகாரியின் மனிதாபிமான செயல் பலரால் பாராட்டப்பட்டது.

## புதிய கடற்படைத் தளபதி ஜனாதிபதியைச் சந்தித்தார்!

புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமெவன் ரணசிங்க நேற்று முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தார்.

தனது பதவியின் பொறுப்புக்களைக் கையேற்றதன் பின்னர் புதிய கடற்படைத் தளபதியாக உத்தியோக பூர்வமாக ஜனாதிபதியுடனான சந்திப்பு நடைபெற்றது. சம்பிரதாய பூர்வ நினைவுப் பரிசில்களும் இதன்போது பரிமாறிக் கொள்ளப்பட்டன.



## சீன வர்த்தகக் குழு இலங்கை விஜயம்!



கொழும்பு, நவ. 01

சங்ஹய் சர்வதேச வர்த்தக மேம்பாட்டு பேரவையின் சீன வர்த்தகக் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

சங்ஹய் வர்த்தகக் குழுவின் தலைவர் ஜாங் ஜின் றொங் தலைமையில் இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தக் குழுவினர் இலங்கை வர்த்தக பேரவையின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி திருமதி தாரா விஜயதிலக தலைமையில் இலங்கை வர்த்தக பேரவையுடன் இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக மேம்பாட்டுகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

## இடம்பெயர்ந்தவர்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட வேண்டும் என்கிறது நோர்வே!

கொழும்பு, நவ. 01

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தால் இடம்பெயர்ந்தவர்கள் மீண்டும் தங்களது சொந்த இடங்களில் குடியேறுவதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று நோர்வே வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான நோர்வேயின் தூதுவர் தோர்ப்ஜன் கோஸ்டாட்செதர் யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் வைத்து இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறுவதை உறுதிசெய்வது கட்டாயமாகும்.

அவர்களின் வாழ்க்கை, அவர்களது சொந்த இடங்களிலேயே மீள நிலைநிறுத்தப்பட வேண்டும்.

இதன் காரணமாகவே காணிகள் விடுவிக்கப்படுவதற்கு ஆரம்பம் முதல் தற்போது வரை நோர்வே அரசு மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கான உதவிகளை வழங்கிவருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

## உள்ளூராட்சித் தேர்தல்: கூட்டு எதிரணி தனித்து போட்டி! குமார வெல்கம தகவல்

கொழும்பு, நவ. 01

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சி தனித்தே போட்டியிடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

பதுளை வியலும பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்து போட்டியிடுவதற்கு கூட்டு எதிர்க்கட்சி தற்போது தீர்மானம் எடுத்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியவுடன், இந்த விடயம் தொடர்பில் முக்கிய சில தீர்மானங்களை எடுக்க உள்ளோம் என குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைப் பாதுகாத்துக்கொள்ள எந்தவொரு தரப்புடனும் பேச்சு நடத்தத் தயார் என கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

### நாளை

02.11.2017
வியாழக்கிழமை

நட்சத்திரம் : ரேவதி பி.இ 5.16 வரை
திதி : திரயோதசி பி.ப 2.41 வரை
சுபநேரம் : 7.34 – 9.04 வரை
இராகுகாலம்: 1.34 – 3.04 வரை

காலைக்கதிர் Kalaikkathir



# சர்வதேச இளைஞர் பௌத்த சங்க சபையின் வருடாந்த சம்மேளனம் இலங்கையில் நிறைவு!

சர்வதேச இளைஞர் பௌத்த சங்க சபையின் 14 ஆவது வருடாந்த சம்மேளனத்தின் நிறைவு நாள் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

மாத்தளை, மில்லவான மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

உலகம் பூராகவும் காணப்படும் தேரவாத, மகாயான, தந்திரயான, வஜ்ரயான மற்றும் சென் பௌத்த மதப் பிரிவுகளைச் சேர்ந்த இளம் பிக்குமார் 1000 பேரின் பங்கு பற்றுதலுடன் நடைபெறும் இந்த மாநாடு இலங்கையில் 3 ஆவது முறையாக நடைபெறுகின்றது.




ஒக்ரோபர் 27 ஆம் திகதி ஆரம்பமான 14 ஆவது வருடாந்த மாநாட்டின் நிகழ்வுகள், கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், கண்டி பல்லேகல மாகாண சபை மாநாட்டு மண்டபம் என்பவற்றில் இடம்பெற்றன.

மில்லவான பிரதேசத்திற்கு அரச தலைவர் ஒருவர் சமுகமளித்த முதல் சந்தர்ப்பத்தை நினைவுகூரும் முகமாக மில்லவான மகா வித்தியாலயத்திற்கு சென்ற ஜனாதிபதியை மாணவர்கள் மிகுந்த ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

சியம் மகா நிக்காயவின் மல்வத்து பிரிவின் அநுநாயக்க வண. திபுல்கும்புரே விமலதர்ம தேரர் சமய அனுட்டானங்களை நிகழ்த்தியதுடன், உலக இளைஞர் பௌத்த சங்கச் சபையின் பொதுச் செயலாளர் வண. முகுனுவெல அனுருத்த தேரர் வரவேற்புரை ஆற்றினார்.

உலக பௌத்த சம்மேளனத்தின் தலைவர் Annga Zadu தேரரரும் இந்த நிகழ்வில் உரையாற்றினார்.

இளைஞர் பௌத்த சங்க சபையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு பரிசில்களும் இதன்போது ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

இந்த நிறைவு நிகழ்வில் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகார, தம்புள்ள ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் பிரியான் விஜேரத்ன உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## இலங்கையில் உள்ள புற்றுநோயாளர்களுக்கு அமெரிக்க பெண் படையினர் கூந்தல் அன்பளிப்பு!





கொழும்பு, நவ. 01

இலங்கையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமெரிக்க பெண் படைச் சிப்பாய்கள் தமது கூந்தலை அன் பளிப்புச் செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அடுல் கேஷாப் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தனது உத்தியோகப் பூர்வ டுவிட்டர் தளத்தில் சில கருத்துக்களை பதிவேற்றியுள்ளார்.

இந்த அர்ப்பணிப்பு மற்றும் தன்னலமற்ற அமெரிக்க பெண் படை சிப்பாய்களை நினைத்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன், அவர்களே உண்மையான சூப்பர் ஹீரோக்கள்! எனவும் அவர் பதிவிட்டுள்ளார்.

இலங்கை வந்துள்ள அமெரிக்க கடற்படைக்குச் சொந்தமான பிரின்ஸ் டோன் கப்பலில் பணிபுரியும் பெண் கடற்படை சிப்பாய்களே இலங்கையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தமது கூந்தலை அன்பளிப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கினிகத்தேன ஆர்ப்பாட்டத்திற்கு நீதிமன்றத்தால் தடையுத்தரவு!



கொழும்பு, நவ. 01

மலையக மக்கள் முன்னணியின்தலைவர் எலப்பிரிய நந்தராஜ் தலைமையில் நேற்று கினிகத்தேன நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு நீதிமன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிவனொளிபாதமலை மஸ்கெலியா பிரதேசசபைக்குட்பட்ட பகுதிக்குள் உள்வாங்கப்படுவதற்கு எதிராக நேற்றையதினம் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கினிகத்தேன நகரில் ஆரம்பமாகிய ஆர்ப்பாட்ட இடத்திற்கு வருகைதந்த கினிகத்தேன பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சரத் சமரவீர நீதிமன்றத்தால் பெறப்பட்ட தடையுத்தரவு மனுவை கையளித்துள்ளார்.

இந்த மனுவில் பிரதான வீதியை மறித்து போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்த முடியாது என்பதுடன், நகரின் வர்த்தக நடவடிக்கைக்கும் பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுத்த முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், 14 நாள்களுக்கு இந்த தடையுத்தரவு செல்லுபடியாகும் எனவும் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து நீதிமன்ற உதரவிற்கமைய பொது மக்களுக்கு இடையூறு இன்றி ஆர்பாட்டம் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இடம் பெற்றதுடன், சிவனொளிபாதமலை பிரிவடைவதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரவுள்ளது என்றும் எலப்பிரிய நந்தராஜ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

## சலுகை விலையிலான மதிய உணவுக்காக நாடாளுமன்றம் சென்றது விமல் அணி!



கொழும்பு, நவ. 01

புதிய அரசமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்றத்தைப் புறக்கணித்த தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மதியபோசனத்துக்காக நாடாளுமன்ற உணவகத்துச் சென்றிருந்தனர்.

இடைக்கால அறிக்கை தொடர்பாக விவாதம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஆரம்பமானது.

இதனைப் புறக்கணிப்பதாக, விமல் வீரவன்சவின் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி அறிவித்திருந்தது.

அத்துடன், அந்தக் கட்சியின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தின் முன்பாக கூட்டு எதிரணி நடத்திய ஆர்ப்பாட்டத்திலும் பங்கேற்றிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்ற தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உணவகத்துக்குச்சென்று உணவு அருந்தினர்.

நாடாளுமன்ற உணவகத்தில் சபை அமர்வு நடைபெறும் நாள்களில் உறுப்பினர்களுக்கு குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் விற்கப்படுகின்றன.

நாடாளுமன்றத்தைப் புறக்கணித்துக்கொண்டு, சலுகை விலை உணவுக்காக, தேசிய சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் நாடாளுமன்ற உணவகத்துக்குச் சென்றிருந்தமை, அரசியல்வட்டாரங்களில் கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

## மனிதாபிமான சிவில் - இராணுவ ஒருங்கிணைப்பு நிகழ்வு!

கொழும்பு, நவ. 01

ஆசிய பிராந்தியத்திற்கான 2017ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனிதாபிமான சிவில் - இராணுவ ஒருங்கிணைப்பு பாடநெறியின் இரண்டாவது நாள் ஆரம்பநிகழ்வில் பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்தியரத்ன கலந்துகொண்டார்.

கொழும்பு முவன்பிக் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர், இந்த பயிற்சிப்பட்டறையை நடத்துவதற்காக இலங்கையைத் தெரிவு செய்தமைக்கு நன்றி தெரிவித்தார்.

பங்கேற்பாளர்கள் இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களினூடாக அதிகமான விடயங்களை கற்றுக்கொள்ள முடியும் என்றும் இதன்போது பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.



மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைக்கும் ஐக்கிய நாடுகள் காரியாலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஒருங்கிணைப்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானதுடன் எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் இலங்கை உட்பட 14 நாடுகளைச் சேர்ந்த 29 பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir



# சாய்ந்தமருதில் பொலிஸார் குவிப்பு; ஸ்தம்பிதம் அடைந்தது இயல்புநிலை!











மட்டக்களப்பு,நவ.01

சாய்ந்தமருதுக்கான தனியான பிரதேச சபையை வென்றெடுக்கும் முகமாக நேற்று இரண்டாவது நாளாகவும் பூரண ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் அங்கு இயல்பு நிலை முற்றாகப் பாதிப் படைந்துள்ளது.

இந்த நிலையில், பள்ளிவாசல் முன்னாலுள்ள அக்கரைப்பற்று, கல்முனை பிரதான வீதியை மறித்து வீதி மறியல் போராட்டமொன்றும் நடாத்தப்பட்டுள்ளது.

இதன்போது கறுப்பட்டியணிந்த பெருந்திரளானோர் வீதியில் அமர்ந்து தமது சத்தியாக்கிரகத்தை நடத்தினர்.

இதனால் வீதிப்போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது. இந்த நிலையில் பெருமளவான பொலிஸாரும் அங்கு குவிக்கப்பட்டனர். அத்துடன், ஹர்த்தால் இன்று மக்கள் எழுச்சிப் பொதுக் கூட்டத்துடன் இடம்பெறுமென பள்ளிவாசல் தலைவர் அல் ஹாஜ் ஹனிபா மாஸ்டர் தெரிவித்துள்ளார்.

மேலும், பூரண ஹர்த்தால் காரணமாக நேற்றும் சாய்ந்தமருது – மாளிகைக்காடு பிரதேசத்திலுள்ள சகல கடைகளும் பூட்டப்பட்டுள்ளன. அத்துடன், பாடசாலைகளில் மாணவர் வரவின்மையால் பாடசாலை நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. வங்கிகளும் பூட்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## தோண்டி எடுக்கப்பட்ட கிராமசேவகரின் சடலம்




மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒந்தாச்சிமடம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடமையாற்றிவந்த நிலையில் மர்மமான முறையில் உயிரிழந்தார். இந்த கிராம உத்தியோகத்தரின் சடலம் நேற்று நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மகிழூரைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தரான சோமசுந்தரம் விக்னேஸ்வரனின்மரணம்தொடர்பான வழக்கு விசாரணைகள் களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்தது.

இந்த நிலையில், கடந்த 28 ஆம் திகதி, மரணமடைந்தவரின் உறவினர்களால் மரணம் தொடர்பில் சந்தேகம் நிலவுகின்றது என ஆட்சேபனை மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ந்து களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற நீதிவான் எம்.ஐ.எம்.றிஸ்வான் சடலத்தைத் தோண்டி எடுத்து விசேட பிரேத பரிசோதனைகளுக்காகக் கொழும்புக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

நீதிமன்றக் கட்டளைக்கு அமைவாக நேற்றையதினம் சடலம் நீதிவான் எம்.ஐ.எம். றிஸ்வான் முன்னிலையில் எருவில் மயானத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்டது.

மேலும், கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி இரவு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளையில் மகிழூர்முனையில் உள்ள குறுக்கு வீதி மின்சாரத் தூணில் மோதுண்ட நிலையில் கிராம சேவகர் சடலமாக மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

மட்டக்களப்பு,நவ.01

சர்வதேசவலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் நேற்று முன்தினம் திருகோணமலை சிவன் கோயிலுக்கு முன்னால் அமைதியான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை மீட்டுத்தருமாறு தெரிவித்தும், யுத்தத்தில் உயிர் இழந்தவர்களுக்காக சுடர் ஏந்தி, சிவன் கோயிலில் பிரார்த்தனை ஒன்றிணையும் நடத்தியுள்ளனர்.

இதனை திருகோணமலை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த அமைதிவழிப் போராட்டத்தில் திருகோணமலை, சம்பூர், கிளிவெட்டி போன்ற பல்வேறு இடங்களைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டுள்ளனர்.



இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கருத்துத் தெரிவிக்கையில்–

யுத்தம் முடிவடைந்து தற்போது அமைதியான சூழ்நிலை நிலவி வரும் நேரத்தில் இன்னும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமது உறவுகளை விடுதலை செய்ய வேண்டும்.



மேலும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசு வாழ்வாதார உதவிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

# வினைத்திறனான செயற்பாடே ஏற்றுமதியை அதிகரிக்க தேவை!




கொழும்பு, நவ. 01

விவசாய உற்பத்திகளையும் அவற்றின் தரத்தையும் அதிகரித்து ஏற்றுமதியினை உயர்த்துவதற்கு வினைத் திறனான செயற்பாடொன்றின் தேவை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனசுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டி ஏர்ல் ரீஜன்ஸி ஹோட்டலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சர்வதேச மிளகு உற்பத்தி அமைப்பின் 45 ஆவது சர்வதேச மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது நாட்டின் விவசாய பொருளாதாரம் பற்றிய வரலாற்றுத் தகவல்களுடன் நாட்டை மீண்டும் விவசாயப் பொருளாதாரத்தை நோக்கிக் கொண்டு செல்வதில் மிளகு உற்பத்தித் துறை முக்கிய பங்கு வகிக்கின்றது.

மிளகு உற்பத்தியாளர்களைப் பலப்படுத்தவும் அந்தத் தொழிற்துறையை மேம்படுத்தவும் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், மீள் ஏற்றுமதியினால் கடந்தகாலத்தில் உள்நாட்டில் மிளகின் விலை வீழ்ச்சியடைந்த போது அது தொடர்பாக அரசு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தேசிய விவசாய உற்பத்தியையும் கைத்தொழில்களையும் மேம்படுத்துவதற்கு அரசால் ஆரம்பிக்கப்பட்டுள்ள முதன்மைச் செயற்றிட்டங்களானதேசிய உணவு உற்பத்தி செயற்றிட்டத்திலும் கிராம சக்தி மக்கள் இயக்கத்திலும் மிளகு உற்பத்தியை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள்பல உள்ளடங்கியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

உலகளாவிய ரீதியில் மசாலாப் பொருளாக பயன்படுத்தப்படும் மிளகு, உலகில் அதிகமாக நுகரப்படும் இயற்கை சுவையூட்டியாகும். உலகளாவிய மிளகு நுகர்வு துரிதமாக வளர்ச்சியடைவதுடன் மிளகினை உற்பத்தி செய்யும் நாடுகளின் ஒன்றிணைப்பிற்கான தேவை மேலெழுந்தமையினால் மிளகு உற்பத்தி மற்றும் சந்தைப் படுத்துதலை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு 1972 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச மிளகு உற்பத்தி அமைப்பு இன்று உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நிறுவனமாகக் காணப்படுகிறது.

மிளகினை உற்பத்தி செய்யும் நாடுகளான இந்தோனேசியா, வியட்னாம், மலேசியா, இந்தியா மற்றும் இலங்கை என்பன அதன் நிரந்தர உறுப்புரிமையைக் கொண்டுள்ளதுடன் பிலிப்பைன்ஸ் மற்றும் பப்புவா நியூகினியா என்பன இணை உறுப்புரிமையைக் கொண்டுள்ளன.

உலகில் சுமார் 475,000 ஹெக்டெயர் பரப்பில் மிளகு உற்பத்தி காணப்படுவதுடன் சுமார் 430,000 மெற்றிக்தொன் அளவான மிளகு சர்வதேச சந்தைக்கு வருடாந்தம் விநியோகிக்கப்படுகிறது. அதற்கேற்ப உலகின் வருடாந்த மிளகு நுகர்வு சுமார் 420,000 மெற்றிக் தொன்களாகும்.

இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பயிர்களுள் ஒன்றாக மிளகு காணப்படுவதுடன், சுமார் 40,000 ஹெக்டெயர் பரப்பில் பயிரிடப்படுகின்றது. அத்துடன் வருடாந்தம் சுமார் 15,000 மெற்றிக்தொன் மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டு, அண்ணளவாக 10,000 மில்லியன் ரூபா அந்நியச் செலாவணி ஈட்டப்படுகின்றது. மிளகு ஏற்றுமதி தொடர்பாக 10,000 லட்சம் பேர் செயற்படுவதுடன் நான்கு லட்சம் விவசாயக் குடும்பத்தினர் இதனை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.

சர்வதேச மிளகு உற்பத்தி அமைப்பின் 45ஆவது சர்வதேச மாநாடு ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் நவம்பர் 02 ஆம் திகதி வரை கண்டியில் நடைபெறுவதுடன் உறுப்பு நாடுகளைச் சேர்ந்த சுமார் 100 பிரதிநிதிகள் இதில் பங்குபற்றுகின்றனர்.

இலங்கையின் மசாலாப் பொருள்களின் உற்பத்தி தொடர்பான விசேட கண்காட்சியும் இதனுடன் இணைந்ததாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்தக் கண்காட்சியையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.


நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவ மாணவியருக்கு விருதுகளும் சான்றிதழ்களும் இதன்போது ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

மேலும், மிளகு உற்பத்தித் துறையின் சிறந்த உற்பத்தியாளர், சிறந்த ஏற்றுமதியாளர் மற்றும் சிறந்த பெறுமதிசேர் உற்பத்தியாளர் போன்ற விருதுகளும் இதன்போது ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அமைச்சர் தயா கமகே, மத்திய மாகாண ஆளுநர் சரத் ஏக்கநாயக்க, சர்வதேச மிளகு உற்பத்தி அமைப்பின் தலைவர் பந்துல விக்கிரமாரச்சி, நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹேக் தீ லியன், சர்வதேச மிளகு உற்பத்தி அமைப்பின் இலங்கை பிரதிநிதி கலாநிதி அசோக்க செனவிரத்ன உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டனர்.

# முதலீட்டுத் திட்டங்களில் ஒத்துழைப்பை வலுப்படுத்த வலியுறுத்துகிறார் சீன அமைச்சர்!





முக்கியமான முதலீட்டுத் திட்டங்கள் தொடர்பாக, சீனாவும் இலங்கையும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி தெரிவித்துள்ளார்.

சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவை பீஜிங்கில் இன்று சந்தித்துப் பேச்சு நடத்திய போதே, சீன வெளிவிவகாரஅமைச்சர்இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

Belt and Road Initiative வரையறைக்குள், இலங்கையுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்த சீனா விரும்புகிறது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலானஉறவுகள்ஆரம்பிக்கப்பட்டு இந்த ஆண்டுடன் 60 ஆண்டுகள் நிறைவடைவதை, இதற்கான வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பாரம்பரிய நட்புறவை பரஸ்பர அரசியல் நம்பிக்கை, பிரதான உட்கட்டமைப்புத்திட்டங்கள், முதலீடு, வர்த்தகம் போன்றனவற்றின் மூலம் வலுப்படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பேச்சுக்களின் முடிவில், இரண்டு நாடுகளின் சார்பிலும், பரஸ்பரசட்ட உதவி உடன்பாட்டுக் கடிதங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

# இந்தோனேசிய கப்பல் இலங்கை வருகை!



இந்தோனேசிய கடற்படைக் கப்பல் ‘பிமா சுசி’ இலங்கைக்கான நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

கொழும்புதுறைமுகத்தை நேற்றுமுன்தினம் வந்தடைந்த இக்கப்பலை இலங்கை கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கமைய மரியாதை செலுத்தி வரவேற்றுள்ளனர்.

இந்தக் கப்பல் இங்கு தரித்திருக்கவுள்ள நாட்களில் இலங்கைக் கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விளையாட்டு நிகழ்வுகள்உள்ளிட்டபல்வேறு நிகழ்வுகளில் கப்பலின் சிப்பந்திகள் பங்கேற்கவுள்ளனர்.

இதேவேளை, இந்தக் கப்பல் தனது உத்தியோக பூர்வ விஜயத்தினை நிறைவு செய்த பின்னர்எதிர்வரும் 2ஆம் திகதி நாட்டை விட்டு புறப்படவுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

# வேலணை மத்திய கல்லூரியின் கல்லூரி தினமும் பரிசளிப்பும்

வேலணைமத்தியகல்லூரித் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை முற்பகல் 11 மணிக்கு பாடசாலையில் அமரர். பொ. கேதாரநாதன் ஞாபகார்த்த அரங்கில் நடைபெறவிருக்கிறது.

கல்லூரி முதல்வர் சிவசாமி கிருபாகரன் தலைமையில் நிகழ்வு இடம்பெறும். முதன்மை விருந்தினர்களாக மருத்துவர்களானநாகரத்தினம்யோகநாதன் மற்றும் விவேகானந்தி யோகநாதன் கலந்துகொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக தீவக வலயக் கல்வி பணிப்பாளர் சு.சுந்தரசிவம், பெரிய பிரித்தானிய பழைய மாணவர் சங்க பொருளாளர் க. இராஜேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக பாடசாலை முன்னாள் அதிபர்பொ.அருணகிரிநாதன், முன்னாள் ஆசிரியரான கா. சச்சிதானந்தம் மற்றும் முன்னாள் ஆசிரியரும் பழைய மாணவர் சங்க பொருளாளருமான பொ.ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள் ளனர் என்று கல்லூரிச் சமூகம் தெரிவித்தது.

## தினசரி ராசி பலன் 01.11.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஐப்பசித் திங்கள் 16 ஆம் நாள் புதன்கிழமை. துவாதசித்திதி மாலை 5.57 மணிவரை. பின்னர் திரயோதசி. நட்சத்திரம் - பூரட்டாதி காலை 7.40 மணிவரை. பின்னர் உத்தரட்டாதி அமிர்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 11.54 மணிமுதல் 1.22 மணிவரை.

**சுபநேரம்** - மாலை 4.37 மணிமுதல் 6.07 மணிவரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி**- ஐப்பசிமாத வளர்பிறை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** உத்தரட்டாதி

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்**: யோசனையான நாள். பணவரவு குறையும். உத்தியோகத்தர்கள் உயர் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாகி வருந்தநேரும். தொழிலில் மந்தநிலை காணப்படும். குடும்பத்தில் கருத்த வேற்றுமை உண்டாகும்.

**ரிஷபம்** : நன்மையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். வியாபாரம் நல்லமுறையில் முன்னேற்றமடையும். உத்தியோகத்தர்களின் மனதில் தெம்பும், உற்சாகமும் கூடும்.

**மிதுனம்** : சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்கள் பணிகளில் மிகுந்த அக்கறை கொள்ளவேண்டும். தொழிலில் பிரச்சினை ஏற்பட இடமுண்டு.

**கடகம்** : நன்மையான நாள். பணப்புழக்கம் திருப்தியைத்தரும். உத்தியோகத்தர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு கூடுதலாகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெறுவீர்கள்.

**சிம்மம்**: அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியான அலைச்சல்கள் அதிகரிக்கும். கொடுத்த பணத்தை திரும்பப் பெற அலைவார்கள். சிலர் படித்து முடித்தும் வேலைதேடி அலைவார்கள்.

**கன்னி** : மத்திமமான நாள் பணவரவு சுமாராக இருக்கும் உத்தியோகத்தர்கள் சகபணியாளர்களிடம் சுமுகமாகப் பழகி வருவதன்மூலம் சிரமங்கள் குறைய இடமுண்டாகும்.

**துலாம்** : சுபீட்சமான நாள் பணபலம் அதிகரிக்கும். தொழிற்பிரிவினருக்கு வளர்ச்சிநிலை காணப்படும். உத்தியோகத்தர்கள் உயர் வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.

**விருச்சிகம்** : நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் மதிக்கப்படுவார்கள்.

**தனுசு** : துயரம் மிகுந்த நாள். பொருளாதாரம் நலிவடையும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் கெடுபிடிகள் அதிகரிக்கும். குடும்பத்தில் சச்சரவுகள் உண்டாகும். உடல் நலம் குன்றும்.

**மகரம்**: சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்கள் தொழிலில் கவனம் எடுக்கவேண்டும். குடும்பத்தில் ஓரளவு சுமுகமான போக்கு காணப்படும்.

**கும்பம்**: மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் நிறைவேறும். தொழிற்பிரிவில் முன்னேற்றமடைவார்கள். வியாபாரத்தில் அமோக லாபம் கிடைக்கும்.

**மீனம்** : இனிமையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் நிரம்பிக் காணப்படும். சகோதர வழியால் நன்மை உண்டாகும். வெளிநாட்டுச் செய்திகள் இனிமையைத் தரும்.

சந்திராட்டமநாள்: மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் இன்று சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# ஐரோப்பியச் சந்தைகளில் சிறந்த வர்த்தக முறைமை

கொழும்பு, நவ. 01

ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையின் மூலம் லட்சக்கணக்கான ஐரோப்பிய வர்த்தக சந்தைகளில் மீண்டும் தமது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சமகால அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக சர்வதேச வர்த்தகத்தில் முன்னெடுத்தல் என்ற தலைப்பில் கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான வர்த்தக செயலமர்வில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆஸ்திரேலியாவின் உதவியுடனும் உலக வங்கியின் உதவியுடனும் இலங்கை வர்த்தக பேரவை மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.



அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

காலத்திற்கேற்ற வகையில் இலங்கையில் வர்த்தக செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உதவும் வகையில் மிகவும் பொருத்தமான நேரத்தில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


வரலாற்றில் வர்த்தக கேந்திர நிலையமாக விளங்கிய இலங்கை, கடந்த காலங்களில் அந்த முக்கியத்துவத்தை இழந்திருந்தது.

ஆனால், சமகால ஐக்கிய அரசுமீண்டும்அந்தநிலையை அடைவதற்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஆஸ்திரேலிய அரசின் இந்த பங்களிப்புடன் சம்பிரதாய வர்த்தக நிதி மற்றும் முக்கிய வர்த்தக நடவடிக்கைகள் வளர்ச்சியடையும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை.

இலங்கை நிதித்துறை இதில் பெரும் கவனம் செலுத்தும் என்றும் நாம் நம்புகிறோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மழையுடன் கூடிய காலநிலை தொடர்ந்து நீடிக்குமாம்!



கொழும்பு, நவ. 01

நாட்டின் பல பாகங்களில் காணப்படும் மழையுடன் கூடிய காலநிலை அடுத்த வரும் நாள்களிலும் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் மத்திய சப்ரகமுவ, மேற்கு, வடமேற்கு, ஊவா, வடக்கு, வடமத்திய மாகாணங்களின் சில பகுதிகளிலும் காலி, மாத்தறை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் 150 மில்லிமீற்றருக்கு அதிகமாக கனமழை பெய்யலாம் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில பகுதிகளில் ஆங்காங்கே 100 மில்லிமீற்றருக்கு அதிகமான மழை வீழ்ச்சி எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் பதிவாகக்கூடும்.

இடியுடன் கூடிய மழையின்போது தற்காலிகமாக பலத்த காற்று வீசும். இடி மின்னலிலிருந்து பொதுமக்கள் அவதானமாக செயற்படுமாறு திணைக்களம் தெரிவித்துள்ளது.

## மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், நவ. 01

யாழ்ப்பாணம், வண். வடகிழக்கு (இறை மூத்த நயினார்) கொண்டலடி விநாயகர் தேவஸ்தான அஷ்ட பந்தன நவகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நாளை மறுதினம் 3 ஆம் திகதி காலை 7.45 - 9.10 மணி வரை இடம்பெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (இ)

## சந்நிதி முருகனுக்கு திருக்கல்யாணம்

யாழ்ப்பாணம், நவ. 01

செல்வச்சந்நிதி ஆலய முருகப்பெருமான் வள்ளி அம்மன் திருக்கல்யாண நிகழ்வு இன்று புதன்கிழமை காலை சிறப்புப் பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து வள்ளி அம்மை திருமணப் படலம் ஆரம்பமாகி இரவு 8 மணியளவில் திருக்கல்யாணம் நடைபெற்று முருகப்பெருமான் வீதிவலம் எழுந்தருளுவார். தொடர்ந்து கந்தபுராண பூசையுடன் நிறைவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் மலிவான விலையில் அரிசி

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் எந்தவிதக் குறைவுமின்றி குறைந்த விலையில் அரிசியை கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பு நுகர்வோருக்கு கிடைக்கும் என்று கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நாட்டரிசி இலங்கைக்கு கிடைத்திருக்கிறது. ச.தொ.ச., கூட்டுறவு விற்பனைநிலையங்கள் ஊடாக இதனை பெற்றுக்கொள்ள முடியும்.



இந்தியாவிலிருந்து 53 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி எதிர்வரும் நவம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் இலங்கையை வந்தடையும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஒரு கிலோ நாட்டரிசி 74 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஹக்கீம் மீதான கொதிப்பே

## சாய்ந்தமருது எதிர்ப்ப

கடந்த 17 வருடங்களாக கல்முனை – சாய்ந்தமருது அரசியல் ரீதியாகவும், அபிவிருத்தி ரீதியாகவும் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது. கடந்த மஹிந்த ஆட்சியில் இரண்டு முழு அமைச்சும், இரண்டு பிரதி அமைச்சும் வழங்கப்பட்ட போதும் தனக்கு மட்டும் ஒரு முழு அமைச்சர் பதவி போதும் என்று மஹிந்தவிடம் சொல்லி விட்டு ஹக்கீம் மட்டும் ஒரேயோர் அமைச்சர் பதவி மட்டும் பெற்றுக் கொண்டு வலம் வந்தார்.

அப்போதுகல்முனைஹரீஸ்எம்.பிக்கு பாதி அமைச்சு கிடைக்கு மென்று கல்முனை மக்கள் பெரிதும் எதிர்பார்த்தார்கள். ஆனால் ஹக்கீம் காலை வாரிவிட்டார். அதன் பின்பு சாய்ந்தமருது மாகாண சபை உறுப் பினர் ஜெமீலுக்கு கிழக்கு மாகாண அமைச்சு கிடைக்கும் என்று சாய்ந்தமருதுக்கு மக்களால் பெரிதும் எதிர் பார்க்கப்பட்டது. அதிலும் தோல்வி தான்.

இப்போது சாய்ந்தமருது பிரதேச சபை விடயத்தில் ஹக்கீம் சாக்குப் போக்குச் சொல்லி வருகின்றார். சாய்ந்தமருது பிரதேச சபை விடயத்தில் தோல்விதான். 'சாய்ந்தமருது பிரதேச சபை பெற்றுக் கொடுத்து விட்டார்'. கல்முனையை டுபாயாக மாற்றியாச்சு. இப்போது இறக்காமத்தை மலேசியாவாக மாற்றப் போகின்றாராம்.'– இப்படியே ஊர் ஊராக ஹக்கீம் றீல் விடுவார்.

அவற்றை ஒரு கூட்டம் நம்பிக் கொண்டு ஆரவாரம் செய்கின்றது. இப்படியாக அரசியல் ரீதியாகக் கடந்த 17 வருடங்களாக கல்முனை – சாய்ந்தமருது ஹக்கீம் காங்கிரஸ் கட்சி என்னும் பெயரில் ஹக்கீம் என்னும் ஒரு தனி மனிதனால் ஓரங்கட்டப்பட்டு வருகின்றது.

ஆனால், இவை பற்றி கல்முனை மக்களோ அல்லது சாய்ந்தமருது மக்களோ ஹக்கீமிடம் வாய்திறப்பதில்லை. காரணம் அம்பாறை மாவட்ட முஸ்லிம் அரசியலில் சக் களத்திச் சண்டை அதிகம். அதாவது கல்முனையில் ஹரீஸ் எம்.பியை வீழ்த்த ஒரு கூட்டம். இப்படியாக குழிபறிக்க, ஓரங்கட்ட ஒவ்வொருவருக்கும் ஒரு கூட்டம். இந்த சக் களத்திக் கூத்தால் நிந்தவூர் ஹசனலிக்கு அடித்தது அதிஷ்டம். பாதி அமைச்சர் பதவி.

ஆனால் இப்படியொரு பாதி அமைச்சுக்கு ஹஸனலி ஹக்கீமுடன் முட்டி மோதியமையும் ஒரு பம்மாத்துக் காட்டியமையும் வேறு கதை. ஆனால் இந்த பாதி அமைச்சு கல்முனை ஹரீஸ் எம்.பிக்கு அல்லது நிந்தவூர் பைசல் காசீம் எம்.பிக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பது அம்பாறை மாவட்ட மு.கா. காரர்களின் ஆதங்கம். மற்றும் அஷ்ரப்பின் மறைவுக்குப் பின்பு கல்முனை, சாய்ந்தமருது ஏதாவது அபிவிருத்தி கண்டுள்ளதா என்றால் யாரும் வாய்திறக்க முடியுமா? அல்லது சொல்லத்தான் முடியுமா?

அப்போ எதற்காக ஹக்கீம் தரப்புக்கு தொடர்ந்து வாக்களித்து அழகு பார்க்கின்றீர்கள், ஹக்கீம் என்னும் அடிமைச் சங்கிலியில் இருந்து விடுபடமுடியாதா?

தற்போது சாய்ந்தமருது பிரதேச சபை கேட்டு சாய்ந்தமருது மக்கள் போராட்டம் நடத்துகின்றார்கள். ஹக்கீமுக்கு வாக்களித்து ஹக்கீமை அமைச்சராக அழகு பார்த்துக் கொண்டு, சாய்ந்தமருது பிரதேச சபை கேட்டு கடையடைப்பு ஆர்ப்பாட்டம், பேராட்டம் நடத்துகின்றீர்கள். இதைவிடக் கேவலம் உள்ளதா? நமது வாக்குப் பலத்தில் எங்கிருந்தோ வந்த ஹக்கீமை வாழவைத்துக் கொண்டு தமிழ் மக்கள் போன்று கடையடைப்பு நடத்துகின்றோம். ஆனால் கல்முனை – சாய்ந்தமருது என்ன அம்பாறை மாவட்டமே ஹக்கீமால் கடந்த 15 வருடங்களாக சகல வழிகளிலும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது என்பதை மறந்து விடுகின்றீர்கள் என்று தீரும் இந்த அடிமைத்தனம்?

பாருங்கள், ஹக்கீம் என்ற தனி மனிதனால் கல்முனைக்கு கடந்த பல வருடங்களாக ஹரீஸ் எம்.பிக்கு பிரதி அமைச்சர் பதவி வழங்காமல் புறக்கணிப்பு. சாய்ந்தமருதுவில் ஜெமீலுக்கு மாகாண அமைச்சர் பதவி வழங்காமல் புறக்கணிப்பு. தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் மேலவை கவுன்ஸில் உறுப்பினராக இருந்த சாய்ந்தமருது கல்விமான் ஜெமீல் மறைந்து 24 மணி நேரத்திற்குள் அந்த இடத்துக்கு தயா கமகேயின் ஆடைத் தொழிற்சாலை ஊழியர் நியமிக்கப்படுகின்றார்.

ஜெமீல் ஏற்கனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் நியமனம் செய்யப்பட்டார். ஜெமீலின் இடத்திற்கு கல்முனைப் பகுதியைச் சேர்ந்த கல்வித் தகைமை கொண்ட ஒருவர் நியமிக்கப்ட்டிருக்க வேண்டும்.

ஆனால், இந்த விடயத்தில் மு.கா எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை; கண்டு கொள்ளவே இல்லை. அதே போன்று கிழக்கு ஆளுநராக பொத்துவில் பொலிஸ் அதிகாரி மஜீட் நியமிக்கப் படவிருந்த போது ஹக்கீம் தனது கடுமையான எதிர்ப்பைக் காட்டியதன் விளைவாக இன்று சிங்களவர் கிழக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்படியாக அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்களாகிய நாம் வெளியூர்க் காரர்களின் அடிமைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றோம் என்பதை நாம் இன்னும் உணர வில்லையா? நாம் நம்மை ஆளும் காலம் வராதா? நாம் எதில் குறைந்துள்ளளோம். நாம் எதிலும் சளைத்தவர்கள் அல்லர். நாம் வெளியூர்க்காரர்களின் ஆதிக்கத்திற்குள் அகப்பட்டு வருகின்றோம். ஏற்கனவே ஹக்கீம் என்ற தனிமனிதனின் பாதணியாக, மந்தைகளாக, அடிமைகளாகப் பதவி கேட்டும், தேர்தல் சீட் கேட்டும் ஹக்கீமின் 'கர்னிவேல்' வீட்டில் தவமிருப்பதை காணும் போதுவெட்கமாகவில்லையா?

இவற்றைக் கண்டு கொள்ளவில்லையென்றால் எதற்காக இந்தக் கட்சியும், ஹக்கீமும், ஹக்கீம் வகைய றாக்களும்? இப்படியான கட்சி ஒன்றும் அதன் வகையறாக்களும் முஸ்லிம் மக்ளுக்குத் தேவையா?

வடக்கு கிழக்குக்கு எந்த சம்பந்தமே இல்லாத – எங்கிருந்தோ வந்த – ஒருவருக்காக நமது உரிமைகளையும், நமது வளங்களையும் பறித்து சிங்களவாதத்திற்கும், சிங்களவர்களுக்கும் காணிக்கையாகக் கொடுக்கும் ஹக்கீம் என்ற தனி மனிதனுக்கும் ஹக்கீம் என்ற தனிமனிதனின் தகிடுதத்தி வேலைகளுக்கும் தாளம் போட்டு இசை அமைக்கும் வேலைக்குத் தொடர்ந்து வாக்களித்து அம்பாறை மாவட்ட மக்கள் என்ன நலனைப் பெறப் போகின்றார்கள்.

கவுன்ஸிலில் சிங்களவர் 5, முஸ்லிம் 3, தமிழர் 1 தென்கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கும் 9 வெளிவாரி உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். 9 உறுப்பினர்கள் அரசியல்வாதிகளின் சிபாரிசிற்கு அமைய அவர்கள் விரும்புகின்றவர்கள் வெளியில் இருந்து நியமனம் செய்யப்படுவார்கள். அந்த வகையில் தான் இந்த 9 பேரும் நியமிக்கப் பட்டுள்ளார்கள். இதில் 5 சிங்களவர்களும் 3 முஸ்லிம்களும் ஒரு தமிழரும் அடங்குகின்றார்கள்.

கடந்த காலங்களில் 5 முஸ்லிம்களும் 4 சிங்களவர்களும் நியமிக்கப்பட்டு வந்தார்கள். புதிய கவுன்ஸில் உறுப்பினராக நியமிக்கப்பட்ட கல்விமான் ஜெமீல் காலமானமையடுத்து அந்த இடத்திற்கு அன்னார் இறந்து 24 மணி நேரத்திற்குள் உடனடியாக சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதைக் கூட ஹக்கீம் வனிக்கவில்லை.

கடந்த மஹிந்த ஆட்சியில் சிங்களப் பேரின வாதம் உச்சக் கட்டத்தில் இருந்த நிலையிலும் தென்கிழக்குப் பல்கலைக் கழகக் கவுன்சில் உறுப்பினர்களில் 3 சிங்களவர்கள் தான் நியமிக்கப்பட வேண்டும். 5 முஸ்லிம்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று மஹிந் தரே சொல்லியிருந்தார். அதனால் தான் மஹிந்த ஆட்சியில் 5 முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டு வந்தார்கள். காரணம் முஸ்லிம் சமூகம் அதிகளவு உள்ள ஒரு நிறுவனத்தில் முஸ்லிம் பிரதிநிதிகள் அதிகளவு நியமிக்கப்பட வேண்டும் என்று இனவாதியான மஹிந்தவே விரும்பியிருந்தார்.

அம்பாறை தயாகமகே, அம்பாறையில் இருந்து 4 சிங்கவர்களை நியமித்துள்ளார். ஐந்தாவது சிங்களவரான நவின் அதிகாரம் எனும் காணி மீட்பு அதிகாரியை ஹக்கீம் நியமித்துள்ளார். அம்பாறை தயாகமகே தனியாக 4 சிங்களவரை நியமிக்க முடியுமானால் இந்த முஸ்லிம் அரசியல்வாதிகளின் நிலைதான் என்ன? இப்படியான ஒரு சிங்கள ஆதிக்கத்தை யாழ். வளாகம் மற்றும் வந்தாறுமூலை வளாகத்தில் காட்ட முடியுமா? அங்கு நடந்து விடுமா, வாக்கு வேட்டைக்காக முஸ்லிம் பகுதியில் பவனிவரும் தயாகமகே முஸ்லிம்களின் உரிமைகளைச் சுரண்டிக் கொண்டிருக்கின்றார்.

சில சொரணையற்ற முஸ்லிம்கள் தயாகமகேக்கு மாலை அணிவித்து வரவேற்று வருகின்றார்கள்.

கடந்த காலங்களில் இதே ஐ.தே.கவில் அமைச்சராக இருந்து கொண்டு தயாரட்ன தீவவாபி மற்றும் ஒலுவில் பொன்னம் வெளி முஸ்லிம் மக்களின் வயல்காணிகளைச் சுவீகரித்து வந்தார். இப்போது தயாகமகே கிளம்பிட்டாரய்யா. இதைத் தட்டிக் கேட்க நாதியற்ற கூட்டங்களாக முஸ்லிம் சமூகம். ஐயோ பாவம்..

முன்னாள் உபவேந்தர் இஸ்மாயில் நியமனத்தில் முன்னாள் அமைச்சர் கருணா மிகவும் கவனம் செலுத்தி ஜனாதிபதி மஹிந்தவிடம் சிபாரிசு பெற்று நியமித்துக் கொடுத்தார்.

பாருங்கள். அம்பாறையில் அப்போது அமைச்சர் அதாவுல்லா, அமைச்சர் ஹக்கீம் மற்றும் இந்த முஸ்லிம் எம்.பிக்கள் இருக்கும் போது கருணா ஒலுவில் பல்கலைக்கழகத்திற்கு உப வேந்தர் நியமனம் செய்கின்றார்.

இது தொடர்பாக நான் கருணாவிடம் அப்போது ஒரு நேர்முகம் காணலில் கேட்டேன், "என்னிடம் முஸ்லிம் ஒருவர் கேட்டார் நான் இனமதம் பாராது செய்து கொடுத்தேன்"– என்றார். பதிவு செய்யப்பட்ட செவ்வியில் உள்ளது.. பாருங்கள் இந்த முஸ்லிம் அரசியல் வியாபாரிகள் இந்தப் பல்கலைக்கழகத்தை கண்டு கொள்ளாததால் கருணா உபவேந்தரை நியமனம் செய்கின்றார்.

முஸ்லிம் சமூகத்தை அதிகமாக கொண்ட இந்தப் பல்கலைக்கழகத்தில் என்று மில்லாதவாறு சிங்களவர்கள் அதிமாகக் கொண்ட கவுன்சில் நியமிக்கப் பட்டமையை எந்வொரு முஸ்லிம் அரசில்வாதியாவது ஜனாதிபதியிடமோ அல்லது பிரதமரிடமோ இன்னும் முறையிடவில்லை என்பதுதான் பெருத்த வெட்கம்.

பொது வாக மர்ஹூம் அஷ்ரப்பிற்குப் பின்பு முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒலுவில் பல்கலைக்கழகத்தைக் கண்டு கொள்வ தேயில்லை. அங்கு என்ன நடக்கின்றது. அங்கு என்ன குறைபாடு உள்ளது என்பது பற்றி எதுவுமே தெரியாது. காரணம், தற்போதைய முஸ்லிம் அரசியல்வாதிகளில் மாகாணசபை உறுப்பினர் ஜெமீலைத் தவிர மற்ற யாருக்கும் பல்கலைக் கழகத்தைப் பற்றித் தெரியாது.

மழைக்காவது அந்தப் பக்கம் ஒதுங்கியிருக்கலாம். கழுதைக்குத் தெரியுமா கற்பூரவாசம்? பல முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு பல்கலைக்கழக அனுபவம் இல்லாத குறைபாடும் ஒரு காரணமாக அமைகின்றது.

இவ்வளவு பெரிய கல்வி நிறுவனத் தின் மீது இவர்கள் அக்கறை செலுத்தாத காரணத்தால் தான் சிங்கள ஆதிக்கம் மற்றும் அங்கு தடி எடுத்தவர்கள் எல்லாம் வேட்டைக்காரனாகி விட்டார்கள். அம்பாறையில் இருந்து இரண்டு சிங்கள வைத்தியர்களும், அம்பாறையில் இருந்து பிரதேச செயலாளரும் மற்றும் தயாகமகேயின் ஆடைத்தொழிற்சாலை அதிகாரியும், கவுன்ஸில் உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றார்கள் என்றால் கல்முனை, சம்மாந்துறைப் பகுதிகளில் டாக்டர்கள் பிரதேச செயலாளர்கள் இல்லையா?

இந்தச் சிங்கள ஆதிக்கத்தை நேர்மைமிக்க ஜனாதிபதியிடம் முறையிட வேண்டிய பெரிய பொறுப்பு இந்த முஸ்லிம் அரசியல்வாதிகளின் கடமையில் இல்லையா? அமைச்சர் பதவியும் பாதி அமைச்சும் தானா இவர்களின் பொறுப்பு?

அமைச்சர் ஹக்கீமைப் பொறுத்த மட்டில் அவர் இந்த கல்வி நிறுவனத்தைக் கண்டு கொள்ளவேண்டிய தேவையே இல்லை. அவர் ஒரு போதும் இந்த வளாகத்தின் நிர்வாகத்தைக் கண்டு கொண்டதேயில்லை. காரணம் ஹக்கீம் கிழக்கைச் சேராதவர். அவருக்குத் தேவையான பதவிகளை நியமனம் செய்துவிட்டு தானும் தன்வேலையும் என்றிருப்பார்.

ஹக்கீம் நினைத்தால் அரசிடம் உறுதியாகப் பேசி சாய்ந்தமருது பிரதேச சபையைப் பெற முடியாதா? சாய்ந்தமருது பிரதேச சபை கிடைக்கவில்லை என்றால் ஹக்கீம் கம்பனி தங்களது அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்வார்களா?






தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

பிரிவு 155 ஐ அமுல்படுத்துவதானது, மட்ரிட் சர்வாதிகாரத்தை நோக்கித் திரும்புவதற்கு ஆழமான எதிர்ப்பு கொண்டிருக்கின்ற பரந்த கட்டலோன் மக்களுடன் ஸ்பானிய ஆட்சியை ஒரு வன்முறையான மோதலுக்குள் தவிர்க்கவியலாமல் கொண்டுவருவது சம்பந்தப்பட்டதாகும். ரஹோயின் அமைச்சரவை நடவடிக்கைகளை வகுத்துக் கொண்டிருந்த சமயத்தில், கட்டலான் தேசிய சட்டமன்றத்தின் (ANC) ஜோர்டி சான்சேஸ் மற்றும் Omnium Cultural அமைப்பின்ஜோர்டி குவிக்ஸார்ட் ஆகிய இரண்டு கட்டலோன் தேசியவாத அரசியல்வாதிகளை மட்ரிட் எதேச்சாதிகாரமாகக் கைது செய்ததற்கு எதிராக பார்சிலோனாவில் அரை மில்லியன் மக்கள் பேரணி நடத்தினர்.





அமைச்சரவை வகுத்த நடவடிக்கைகள், கட்டலோனியாவில் ஜனநாயக ஆட்சி வடிவங்களை நிறுத்தி வைப்பது மற்றும் பெயரைத் தவிர்த்து அனைத்திலும் இராணுவ ஆக்கிரமிப்பின் ஓர் அரசாங்கத்தை அமர்த்துவது ஆகியவற்றைக் கொண்டதாக இருக்கின்றன. அவற்றில் இவையும் இடம் பெறுகின்றன:

★கட்டலோன் முதல்வர் கார்லஸ் புய்க்டெமொன்ட் மற்றும் அத்தனை கட்டலோன் பிராந்திய அமைச்சர்களையும் அகற்றி விட்டு, அந்த இடத்தில் இந்த நோக்கத்திற்காக ஸ்பானியஸ அரசால் உருவாக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட சிறப்புக் குழுக்கள் அல்லது அதிகாரிகளை வைப்பது.

★ பிராந்தியத் தேர்தலுக்குஅழைப்பு விடுக்கின்ற அவர்களது அதிகாரத்தை ஸ்பானிய அரசுக்கு மாற்றுவது.

★ கட்டலோன் பிராந்திய பொலிஸான Mossos d'Esquadra ஐ கட்டுப்படுத்துவதற்கும்,பிராந்தியத்தில் பொலிஸ் அல்லது சிவில் கார்ட் பிரிவுகளை நிலைநிறுத்துவதற்கும் மற்றும் பிற பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்குமான முழு அதிகாரங்களை மட்ரிட்டுக்கு வழங்குவது.

★கட்டலோனியாவின் பொருளாதார, நிதி, வரி மற்றும் வரவு-செலவு அதிகாரங்களது கட்டுப்பாட்டை ஸ்பானியக் கருவூலத்திற்கு ஒதுக்குவது.

★ கட்டலோனியாவில் மட்ரிட்டினால் அமைக்கப்படுகின்ற அதிகாரங்களின் மேற்பார்வையில் இருக்கும் ஓர் அரசாங்கத்தை அல்லது நடவடிக்கையை நியமிப்பதற்கு கட்டலோன் சட்டமன்றத்துக்கு அதிகாரமில்லாமல் செய்வது.

★கட்டலோன் அரசு ஊடகங்களின் கட்டுப்பாட்டை மாட்ரிட்டுக்கு மாற்றுவது, ஸ்பானிய அரசியல்சட்டத்தில் இருக்கின்ற விழுமியங்கள் மற்றும் கோட்பாடுகளுக்கு மரியாதையளிப்பதை உத்தரவாதம் செய்கின்ற வகையில் அது அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்.

**கட்டலோன் தன்னாட்சியை இடைநீக்கம் செய்வதற்கு மட்ரிட் எடுத்த நடவடிக்கையானது, மேற்கு ஐரோப்பாவில் ஜனநாயக ஆட்சி வடிவங்கள் ஒரு வரலாற்று உருக்குலைவை கண்டதைக் குறிக்கிறது.**

இந்த நடவடிக்கைகள் இந்த வார இறுதியில் ஸ்பானிய செனட்டினால் ஒப்புதலளிக்கப்பட இருக்கின்றன.




அங்கு ரஹோயின் வலது-சாரி மக்கள் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை உள்ளது.

கட்டலோன் தன்னாட்சியை இடைநீக்கம் செய்வதற்கு மட்ரிட் எடுத்த நடவடிக்கை, மேற்கு ஐரோப்பாவில் ஜனநாயக ஆட்சி வடிவங்கள் ஒரு வரலாற்று உருக்குலைவை கண்டதைக் குறிக்கிறது. 40 வருடங்களுக்கு முன்பாக இதேதினத்தில் தான் கட்டலோன் தேசியவாத அரசியல் வாதியான Josep Taradellas ஸ்பானிய உள்நாட்டுப் போரின் போது பிரான்சிஸ்கோ பிராங்கோவினால் அமர்த்தப்பட்ட பாசிச ஆட்சி தொழிலாள வர்க்கத்தின் பெரிய போராட்டங்களுக்கு மத்தியில் நிலைகுலைந்த நிலையில், கட்டலோன் அரசுக்கு தலைமை கொடுப்பதற்காக அவர் நாடு கடந்து வாழ்ந்த பிரான்சில் இருந்து பார்சிலோனாவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்.

மொழி உரிமைகள் வழங்குவது மற்றும் கட்டலோனியாவுக்கு தன்னாட்சி வழங்குவது ஆகிய இரண்டும், கட்டலோன் மொழியை அரசு உபயோகத்துக்குப் பயன்படுத்துவதைத் தடைசெய்திருந்த பிராங்கோவின் பாசிச மரபை வெல்வதற்கான முக்கியமான அம்சமாகப் பார்க்கப்பட்டது.



சமூக மற்றும் ஜனநாயக உரிமைகளின் விடயத்தில், பிராங்கோவுக்கு பிந்தைய காலகட்டத்தில் விட்டுக்கொடுக்கப்பட்டதை மறுதலிப்பதற்கு இப்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் துணையுடன் மட்ரிட் நகர்ந்து கொண்டிருக்கிறது. புரூசெல்ஸில் சென்ற வாரத்தில், பிரிவு 155 ஐ கொண்டு வருவதற்கு ரஹோய் சூளுரைத்திருந்ததன் பின்னர், நடந்த ஐரோப்பிய ஒன்றிய உச்சிமாநாட்டில், ஜேர்மன் சான்சலரான அங்கேலா மேர்கெல், பிரிட்டிஷ் பிரதமரான தெரசா மே மற்றும் பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன் உள்ளிட்ட அனைவருமே கட்டலோனியாவுக்கு எதிரான ரஹோயின் தாக்குதலை வெளிப்படையாக வழிமொழிந்தனர்.

சிவில் கார்ட் பொலிஸ் மட்டுமல்லாது, Arapiles இன் வாகனமய இராணுவ காலாட்பிரிவு உள்ளிட்ட ஸ்பெயினின் இராணுவ அலகுகளும் கூட, நடவடிக்கைகளுக்காகத் தயார் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

புரட்சிகரத் தாக்கங்களுடனான ஒரு வெடிப்பான மோதல் களமிறக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒக்ரோபர் 1 கருத்துவாக்கெடுப்பு கட்டலோன் சுதந்திரத்துக்கு ஆதரவாக 90 சதவீத வாக்களிப்பை அதாவது 2 மில்லியனுக்கும் அதிகமானோரின் வாக்களிப்பை பெற்றதன் பின்னர், ஒரு தேர்ந்தெடுக்கப்படாத சர்வாதிகாரத்தை மட்ரிட் திணிப்பதானது பெரிய எதிர்ப்பைத் தூண்டும். கட்டலோனியாவின் சென்ற பிராந்தியத் தேர்தலில் வெறும் 8 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்ற PPக்கு அங்கு எந்த ஆதரவோ அல்லது வாக்கு வங்கியோ கிடையாது.

மாட்ரிட் அதிகாரத்தைப் பறிப்பதானது கட்டவிழ்த்து விடக் கூடிய ஆழமான வேர் கொண்ட எதிர்ப்பு குறித்து பார்சிலோனாவில் La Vanguardia எச்சரித்தது. கட்டலோன் மக்களில், பிரிவினைவாதிகளாக இல்லாத அதேசமயத்தில், 1977 இல் பெற்ற தன்னாட்சி உருக்குலையப் போவதைக் கொண்டு பெரும் கண்ணீர் வடிக்கப் போகும் பலர் இருக்கிறார்கள் என்று அது எழுதியது. அது தொடர்ந்தது: லிபீரியன் தீபகற்பத்து அரசியல் நுட்பமான வித்தியாசத்தை அனுமதிப்பதில்லை. கட்டலோனியா தண்டிக்கப்பட்டாக வேண்டும் என்பதுதான் அந்த மண்ணில் எழுதப்பட்டிருக்கும் செய்தியாக இருக்கிறது.

**ஆர்ப்பாட்டக்காரர்கள் அவர்களின் தலைக்கு மேல் பறந்து கொண்டிருந்த சிவில் கார்ட் பொலிஸ் ஹெலிகொப்டர்களைப் பார்த்து விசிலடித்தனர். பரிகசித்தனர், No pasarán (அது நடக்காது) என்ற 1936-1939 ஸ்பானிய உள்நாட்டுப் போரின் பிராங்கோ-எதிர்ப்பு முழக்கத்தை அவர்கள் முழங்கினர்.**

சான்சேஸ் மற்றும் குவிக்ஸார்ட் சிறையிலடைக்கப்பட்டதற்கு எதிராக 450,000 பேர் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதற்காக கட்டலோனியா எங்கிலும் இருந்து பார்சிலோனாவுக்கு பயணம் செய்தவர்களால் பேருந்துகளும் தொடர்வண்டிகளும் நிரம்பி வழிந்தன. புய்க்டெமொன்ட் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார். அதைப் போலவே கட்டலோனின் முக்கிய அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகளும் கலந்து கொண்டன.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

143



## அத்தியாயம் - VIII

## விடுதலைப் போரின் நாயகர்கள்

பிரபாகரனுக்குமெய்ப்பாதுகாவலராக 24 மணிநேரம் தொண்டு செய்தும், பின்பு போர்க் களங்களில் உயிராபத்திற்கும் மத்தியில் பணிபுரிந்து வந்த சொர்ணம் திருமணம் செய்துகொண்டபோது நாம் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். ஜெனி எனப்படும் அழகான இளம்பெண்ணை மணந்துகொண்டார். ஜெனி ஒரு பெண் போராளி. அப்பொழுது, பெண்கள் படைப்பிரிவின் கட்டளைப் பீடத்தில், மூன்றாம் இடத்தில் அவர் பணிபுரிந்தார். சிங்கள இராணுவத்தின் யாழ்ப்பாணம் மீதான படையெடுப்பின்போது அவர் வசித்த வீடு மீது குண்டு வீசப்பட்டது. அப்பொழுது கர்ப்பிணியாக இருந்த ஜெனி தெய்வாதீனமாக உயிர் தப்பினார். இந்தச் சம்பவத்தின்போது சொர்ணம் வீட்டிலில்லை. முன்னேறி வந்துகொண்டிருந்த சிங்களப் படையணிகளை எதிர்த்து களத்தில் நின்று போராடிக் கொண்டிருந்தார். வன்னியில் நாம் வசித்தபோது, சொர்ணம் திருகோணமலைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். இதனால் ஜெனியைப் பிரிந்து நீண்டகாலமாக திருகோணமலையில் அவர் பணியாற்ற வேண்டியிருந்தது. பிரிவுத் துயரிலிருந்த ஜெனிக்கு சிறு ஆறுதல் கொடுப்பதற்காக நானும் எனது கணவரும், அவரது வீட்டுக்கு அடிக்கடி சென்று வருவோம். நாம் வன்னியிலிருந்து வெளியேறிய பொழுது, இரு சிறிய பெண் குழந்தைகளுடன் அவர்கள் மிகவும் மகிழ்ச்சிகரமான குடும்பமாக வாழ்ந்தனர்.

மூத்த களத் தளபதிகளில் வீரத்துக்கு இலக்கணமாக திகழ்ந்து, போர்க் கலையில் விற்பன்னராக விளங்கி, பல்வேறு களம் கண்டு பல சாதனைகளைப் படைத்தவர்கள் என்றால் பானுவையும், தீபனையும், பால்ராஜ்யுமே குறிப்பிட்டுச் சொல்லலாம். போராளிகளிடமும் பொது மக்கள் மத்தியிலும் இம்மூவருக்கும் பெருமதிப்புண்டு.


யாழ்ப்பாண முன்னாள் தளபதியாகப் பணிபுரிந்த பானு அபார துணிச்சலுடையவர். போர்க் களத்தில் தனது உயிரை துச்சமென மதித்து படை நடத்துபவர். கிட்டு பீரங்கிப் படைப் பிரிவின் தளபதியாக பணிபுரியும் அவர், தனது படைப் பிரிவினரை மிக உயர்ந்த நிபுணத்துவ தரத்திற்கு வளர்த்தெடுத்தார். விடுதலைப் புலிப் படையணிகள் தலை சிறந்த மரபுவழி இராணுவ சக்தியாக வளர்ச்சி பெற்றமைக்கு இவருக்கும் பங்குண்டு இவரது தலைமையின் கீழ் இயங்கும் பீரங்கி, மோட்டார் படைப்பிரிவுகள் பல்வேறு முக்கிய சமர்களில் பிரமாதமான வெற்றிகளையீட்டி, விடுதலைப் போருக்கு பெரும் பங்காற்றின.

அரசியல் நிலைமைகளை அறிந்து கொள்வதற்காக பானு எமது வீட்டுக்கு



வந்து போவார். பானுவிடமிருந்தே வன்னியின் நில வரைபடங்களை பாலா பெறுவதுண்டு. போர்க்கள நிலைவரங்களையும் எதிரியின் படை நகர்வுகளையும் விவரமாக அறிந்து கொள்வதற்கு இந்த நிலைவரைபடங்கள் பாலாவுக்கு உதவியாக இருக்கும். பாலாவின் கிண்டலும் பகிடியும் பானுவுக்கு நன்றாகப் பிடிக்கும். பானு ஒரு நகைச்சுவை ரசிகர். எனவே, இருவரும் சந்தித்து உரையாடும்போது பாலாவின் செயலகக் கொட்டில் சிரிப்பொலியில் அதிர்ந்த படியிருக்கும்.

மூத்தகளத்தளபதிகளில் முக்கியமான இடத்தை வகிப்பவர் தீபன். இவர் வன்னியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். எத்தனையோ களங்கள் கண்டவர். போர்க் கலையில் தேர்ச்சியும் அனுபவமும் பெற்று முதிர்ந்தவர். மென்மையாகப் பேசுவார். அடக்க ஒடுக்கமானவர். போர்க்கலையில் அவரது அபாரமான



திறனாற்றல் காரணமாக இயக்கத்தில் அவருக்கு பெயரும் புகழும் மேலோங்கி நிற்கின்றன. அப்படிப்பட்ட பிரபல்யமான ஒருவர் மிகவும் பணிவாகவும் அடக்கமாகவும் மக்களோடும் போராளிகளோடும் பழகுகின்றமையைக் காண ஆச்சரியமாகவே இருக்கும். வெளித்தோற்றம் இவரது உள்ளார்ந்த இயல்புகளைப் புலப்படுத்தத் தவறினும், போர்க்கலையில் இவர் ஒரு வித்தகர். உறுதியில் ஓர் இரும்பு மனிதர். இப்படியான இவரது சிறந்த பண்புகளே போராளிகளைக் களத்தில் அபூர்வ சாதனை புரியத் தூண்டுகின்றன. தீபன் எமது வீட்டுக்கு வருகை தந்து பாலாவுடன் உரையாடும் பொழுதெல்லாம் கள நிலைவரங்களை துல்லியமாக எடுத்து விளக்குவார். அத்தோடு பாலாவிடம் உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் நிலைமைகள் பற்றியும் ஆவலுடன் கேட்டறிவார்.

விடுதலைப் போரில் மகத்தான சாதனைகளைப் படைத்து, நீண்டகள அனுபவங்களைக் கொண்டவர் பால்ராஜ். இவர் மிகவும் அரிதாக எமது வீட்டுக்கு வந்தபோதும் எமக்கும் அவருக்கும் மத்தியில் பரஸ்பரம் மதிப்பும் மரியாதையும் உள்ளன. நம்பமுடியாத அளவுக்கு இந்த மாவீரன் மிகவும் அடக்கமானவர்; தற்பெருமையற்றவர்; எளிமையானவர். போர்க்களத்தில் அவர் ஈட்டிய சாதனைகள் பிரமிக்கத்தக்கவை. பால்ராஜ் அபாரமான துணிவுடையவர். தனது தலைமையின் கீழுள்ள போராளிகளுடன் பாசத்துடன் நெருங்கிப் பழகுவார். அவர்களது நலனில் கண்ணும் கருத்துமாக இருப்பார். இதனால் போராளிகள் இவர் மீது ஆழமான நேசமும் மதிப்பும் வைத்திருக்கிறார்கள். களத்தில் போராளிகள் செய்யும் அர்ப்பணிப்புகளையும் சாதனைகளையும் கருத்தில் கொண்டு, தனது ஓய்வான நேரத்தின் பெரும் பகுதியை, முகாம்களில் போராளிகளுடன் செலவிடுவார் பால்ராஜ்.

1993 ஆம் ஆண்டு நிகழ்ந்த 'யாழ்தேவி' சமரில் பால்ராஜ் காயமடைந்தார். பீரங்கிக் குண்டு வெடித்து அவரது கால் ஒன்றைச் சிதைத்தது. அவரது காலைத் துண்டிப்பதில்லையென மருத்துவர்கள் முடிவெடுத்தனர். இதனால் சிதைந்து போன கால் குணமாகும்வரை அவர் அனுபவித்த வேதனையும் வலியும் விவரிக்க முடியாதவை. நாம், அடிக்கடி யாழ்ப்பாண மருத்துவமனைக்குச்சென்று பால்ராஜை பார்த்து வருவோம். அப்பொழுதெல்லாம் அவர் அனுபவித்த உடல் உபாதை, அவரது முகத்தில் தெரியும். நீரிழிவு வியாதியும் இருந்ததால் அவர் குணமடைவதில் தாமதமேற்பட்டது. பல மாதங்களாக மருத்துவமனை படுக்கையில் வேதனையுடன் போராடி இறுதியாகக் குணமடைந்தபோதும் அவர் நொண்டித்தான் நடக்க வேண்டியிருக்கிறது. என்றாலும். தனது விழுப்புண் பற்றி அவர் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. தனக்கு நிகழ்ந்ததை அற்ப விடயமாகக் கருதும் அவர், இதனைவிட எத்தனையோ பெரும் துண்பங்களைப் போராளிகள் அனுபவித்தமை மட்டுமன்றி மகத்தான தியாகங்களையும் புரிந்துள்ளார் எனச் சொல்வார். இப்பொழுதும் யுத்த அரங்கில் களத் தளபதியாகப் பணிபுரிந்து வருகிறார் பால்ராஜ்.



(தொடரும்...)

மருத்துவர்
சர்மிலி வேதநாயகம்பிள்ளை
(உணர்வழித்தல் பிரிவு)



# மகப்பேற்றுக்கு உணர்வழிக்கும் சத்திர சிகிச்சை!

மகப்பேறு என்பது பெண்களின் வாழ்வில் நிகழும் ஒரு முக்கியமான நிகழ்வாகும். ஆரம்ப காலங்களிலே வீடுகளிலேயே பிரசவம் நடைபெற்றது. மருத்துவத் துறையின் வளர்ச்சியினால் தற்போது வைத்திய சாலைகளில் தகுந்த தாய் சேய் பராமரிப்புடன் பாதுகாப்பானதாக நடைபெறுவதுடன், இதனால் காப்பிணித் தாய்மாரினதும், பிறந்த குழந்தைகளினதும் இறப்பு வீதம் பெருமளவு குறைந்துள்ளது.

தற்பொழுது சாதாரண பிரசவம் நடைபெறுகின்ற அதேவேளை சிசேரியன் சத்திரசிகிச்சை மூலமும் குழந்தைகளை பிரவேசிக்கும் தன்மை அதிகரித்துக் கொண்டு வருகின்றது. சிசேரியன் சத்திர சிகிச்சையானது தாயினதும், சேயினதும் நன்மையை கருத்திற் கொண்டும் சாதாரண பிரசவத்தின் போது பாதக விளைவுகள் ஏற்படும் எனக் கருதும் பட்சத்தில் செய்யப்படுகின்றது.

சிசேரியன் சத்திரசிகிச்சையானது, முந்தைய பிரசவம் சிசேரியன் சத்திர சிகிச்சை மூலம் நடைபெற்றிருந்தால் கர்ப்பப்பையில் குழந்தையின் நிலை சாதாரண பிரசவத்திற்கு தடையாக இருக்கும் எனக் கருதும் பட்சத்திலும், சடுதியாக குழந்தையின் இதயத்துடிப்பு குறைவடைவதால், கருப்பையினுள் குழந்தை சடுதியாக மலம் கழித்தல், கர்ப்பிணிக்கு உயர் குருதி அமுக்கம் இருந்தால் சூழ்வித்தகத்தின் (Placenta) அசாதாரணமான அமைவு பிரசவத்தின் போது அதிக பாதக விளைவுகள் ஏற்படுத்தக்கூடிய வகையில் இருத்தல் போன்ற நிலைமைகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

சிசேரியன் சத்திர சிகிச்சை செய்யப்படும் நேரமானது தாயினதும், சேயினதும் நிலைமை, வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை செய்வதற்கான வசதி என்பவற்றை கருத்தில் கொண்டு செய்யப்படுகின்றது. இதனை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

வகை I- தாய்க்கு அல்லது சேய்க்கு அல்லது இருவருக்கும் உடனடி யாக உயிராபத்து இருப்பதால் 30 நிமிடங்களுக்குள் உடனடியாக குழந்தையை பிரசவிக்க வேண்டிய நிலை.

வகை II -தாய்கும் சேய்க்கும் உயிராபத்து இருக்கின்றபோதும் உடனடியான ஆபத்து நிலமை இல்லை. எனவே மேலதிக தாமதமின்றி குழந்தையை பிரசவிக்கவேண்டும்.

வகை III - விரைவான பிரசவம் தேவைப்படும். ஆனால் தாய்க்கும் சேய்க்கும் உயிராபத்தில்லை .

வகை IV- சத்திரசிகிச்சை தேவை. ஆனால் தாய்க்கும் சேய்க்கும் ஆபத்தில்லை. தாயினதும் வைத்தியரினதும் சத்திர சிசிச்சைக் கூடத்தினதும் வசதியைக் கருத்தில் கொண்டும் செய்யப்படலாம்.

சிசேரியன் சத்திரசிகிச்சையானது உடலின் தொப்புளுக்கு கீழான பகுதியை உணர்வழிப்பதன் மூலம் (Regional Anaesthesia) அல்லது முழுமையான உணர்வழித்தலின் மூலம் (General Anaesthesia) செய்யப்படுகின்றது. இரண்டு முறையிலும் சாதக பாதக விளைவுகள் இருக்கின்றபோதிலும் பெரும்பாலான சத்திரசிகிச்சையிலான பிரசவமானது உடலின் குறிப்பிட்ட பகுதியை உணர்வழித்தலின் மூலமே செய்யப்படுகின்றது.



சிசேரியின் சத்திரசிகிச்சையின் முன்பு உணர்வழித்தல் வைத்தியர் கர்ப்பிணியுடன் கலந்து ஆலோசித்து அவருக்கு பொருத்தமான முறையைத் தெரிவு செய்வதுடன் அதன்போது ஏற்படும் சதாக பாதக விளைவுகளை விளங்கப்படுத்தி கர்ப்பிணியின் சம்மதத்தை எழுத்து மூலம் வாங்கிய தன் பின்னர் சத்திர சிகிச்சை அறைக்குள் கொண்டுவரப்படுவார்.

உடலின் குறிப்பிட்ட பகுதியை உணர்வழிப்பதானது முழுமையான மயக்க மருந்து கொடுப்பதனை விட பாதக விளைவுகள் குறைவானதாகும். இருப்பினும் சில சந்தர்ப்பங்களில் இதனைக் கொடுக்க முடியாது. அவையாவன குருதி உறையாத தன்மை காணப்படல், இதய நோய்கள் குறிப்பாக வால்வுகளில் பாதிப்பு உள்ளவர்கள், கர்ப்பிணி தாய் சம்மதம் தெரிவிக்காமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

உடலின் குறிப்பிட்ட பகுதியை உணர்வழித்தலானது முண்ணானை சுற்றி உள்ள திரவத்தினுள்(CSF) உணர்வழிக்க தேவையான மருந்தை உட்செலுத்துவதன் மூலம் பெறப்படுகின்றது. இதன்போது கர்ப்பிணியை சத்திரசிக்சை செய்யும் மேசையில் இருத்தி, முதுகுப் பகுதியை கிருமி நீக்கம் திரவத்தினால் சுத்தம் செய்து நாரி முள்ளந்தண்டு என்பு இடைவெளியை அடையாளம் கண்டு முதலில் தோல் பகுதிக்கு விறைப் பூசியைப் போட்டு அதனை தொடர்ந்து நீளமான மெல்லிய ஊசியைப் பாவித்து முண்ணானை சுற்றியுள்ள திரவத்தினுள்(CSF) மருந்து செலுத்தப்படுகின்றது.

இதன் பின் கர்ப்பிணி தாய் படுக்க வைக்கப்பட்டு குருதி அமுக்கம், இருதயத் துடிப்பு, ஒக்சிசன் அளவு



போன்றவற்றை அவதானிப்பதுடன் சத்திரசிகிச்சை செய்வதற்குத் தேவையான அளவு உணர்வு அற்ற நிலை உறுதிப்படுத்தப்படும் இதன் போது கர்ப்பிணியின் கால்கள் இரண்டுமே பாரமாவதனை உணர்வார். அத்துடன் தொப்புளுக்கு கீழே உள்ள பகுதிகளும் விறைப்படையும் இதன் போது கர்ப்பிணிசுய உணர்வோடு இருக்கின்றமையுடன் அருகில் நிற்கும் உணர்வழித்தல் வைத்தியருடன் கதைக்க முடிவதுடன் குழந்தை பிரசவித்த பின்னர் உடனடியாக குழந்தையை பார்ப்பதுடன் தாய்பாலூட்டக் கூடியதாக இருப்பதனால் தாய்க்கும் சேய்க்குமான பாசப் பிணைப்பு அதிகரிக்கின்றது.

முழுமையான உணர்வழித்தலோடு ஒப்பிடுவகையில் உடலின் குறிப்பிட்ட பகுதியை உணர்வழித்தலானது பாதக விளைவுகள் குறைவாக இருப்பினும் சில நேரங்களில் குருதி அமுக்கம் குறைவடைதல், இருதயத் துடிப்பு குறைவடைதல், சுவாசிக்க கடினமாக உணர்தல் போன்றன ஏற்படலாம். இது முண்ணானைச் சுற்றி உள்ள திர வத்தினுள் செலுத்தப்பட்ட மருந்தானது இதயத்திற்கான சில நரம்பு வழங்கலை தடை செய்வதனால் ஏற்படுகின்றது. இதனைப் பெரும்பாலும் உடனடியாக தகுந்த சிகிச்சை மூலம் குணப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

சில சந்தர்ப்பங்களில் முழுமையான உணர்வழித்தல் (General Anaesis ) முறையைப் பயன்படுத்தி சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது. உதாரணமாக அதிகளவான குருதிப்போக்குடன் கர்ப்பிணியின் குருதி அழுத்தம் மிகவும் குறைவடைவதால் குருதி உறையாத தன்மை, அதிதீவிர ஆபத்தான நிலையில் குழந்தை இருத்தல் குருதியில் கிருமித்தொற்று கர்ப்பிணியின் விருப்பம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

முழுமையானஉணர்வழித்தலானது சாதாரண நோயாளிகளுடன் ஒப்பிடுகையில் கர்ப்பிணிகளில் அதிகளவான பாதக விளைவுகளை கொண்டுள்ளது. ஏனெனில் கர்ப்ப நிலைமை காரணமாக உடலில் ஏற்படும் மாற்றங்கள் முழுமையான உணர்வழித்தலுக்கான மருந்துகளை செலுத்தும் போது இரப்பையில் உள்ள சுரப்புகள் உணவுப்பதார்த் தங்கள் நுரையீரலுக்குள் செல்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்ப துடன் சுவாசத்தை வழங்குவதற்கு தேவையான குழாயை சுவாசத் தொகுதியினுள் செலுத்துவதும் கடினமாக இருக்கலாம். அத்துடன் தாய்க்கு கொடுக்கப்படும் மருந்துகள் குழந்தையையும் சென்றடைந்து குழந்தைக்கும் சில பாதிப்புகள் ஏற்படலாம்.

எனவே, பெரும்பாலான சிசேரியன் சத்திர சிகிச்சை உடலில் குறிப்பிட்ட பகுதி உணர்வழிப்பதன் மூலம் செய்யப்படுகின்றது. சத்திர சிகிச்சையின் போது அதிகளவு குருதிப் போக்கு ஏற்படும் பட்சத்திலும் உயர் குருதி அமுக்கமும் அதனால் ஏற்படும் வலிப்பு நிலையும் ஏற்கனவே இருதய வால்வுகளில் பாதிப்பு உள்ள தாய்மார்களும் சத்திர சிகிச்சையின் பின் அதி தீவிர பராமரிப்பு பிரிவுக்கு (ICU) மாற்றப்படுவார்கள் மற்றவர்கள் சாதாரண விடுதிக்கு அனுப்பப்படுவார்கள்.

சிசேரியன் சத்திரசிகிச்சையின் போது உடலின் குறிப்பிட்ட பகுதியினை உணர்வழித்தலானது கர்ப்பிணிக்கு பாதுகாப்பானதும் வலி நிவாரணத்தை வழங்குவதுடன் சத்திரசிகிச்சையின் போது ஏற்படும் பாதக விளைவுகளை விரைவில் இனங்கண்டு அதற்கான மருத்துவ சேவையினை வழங்குவதுடன் தேவை ஏற்படின் சத்திர சிகிச்சையின் பின்னரும் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் தேவையான சேவையினை வழங்குவதும் ஆகும்.



# திருகோணமலை துறைமுகம் இந்தியாவுக்கு தாரை வார்க்கப்படாது என்கிறார் பிரதமர்!

திருகோணமலை துறைமுகத்தை இந்தியாவுக்கோ வேறெந்த நாட்டுக்கோ தாரை வார்க்க முற்படவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



இந்தியா வங்காள விரிகுடாவுக்குள் அமைந்துள்ள ஒரு நாடு, அந்நாடு வர்த்தக நடவடிக்கைகளுக்காக திருகோணமலைத்துறைமுகத்தை பயன்படுத்திக் கொள்ள விரும்பி அனுமதி கோரியுள்ளது.

அதன் மூலம் இலங்கைக்கு சாதகமான நன்மைகளைப் பெற முடியும் என்பதால் அதற்கான அனுமதியை வழங்க தீர்மானிக்கப்பட்டது.

இதேபோன்று ஜப்பானும் தனது விருப்பத்தைக் கோரியுள்ளது. இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

சிங்கப்பூர் மற்றும் எந்தவொரு நாடாக இருப்பினும் வங்காள விரிகுடாவை வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ள திருகோணமலைத் துறைமுகத்தை கேந்திரமாகப் பயன்படுத்த விண்ணப்பித்தால் அது குறித்து சாதகமாக ஆராய முடியும்.

அப்படிச் செயற்படுவதை எமது துறைமுகத்தை மற்றொரு நாட்டுக்கு தாரை வார்ப்பதாகக் கருத முடியாது.

எமது நாட்டின் எந்தவொரு வளத்தையும் நாம் எவருக்கும் தாரைவார்க்கப் போவதில்லை. சிலர் மக்களை தவறாக வழிநடத்த முற்படுகின்றனர்.

கடந்த ஆட்சியின் போது எமது வளங்கள் விற்கப்பட்டமை போன்று அரசு செய்ய முற்படமாட்டாது என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## இளைஞர் யுவதிகளுக்கான செயலமர்வு மலையகத்தில்!




கொழும்பு, நவ. 01

நுவரெலியா பெருந்தோட்டப் பகுதியில் கண்ணியமான தொழில் ஊக்குவிப்பு எனும் தலைப்பில் மலையக இளைஞர் யுவதிகளுக்கான ஒரு நாள் செயலமர்வுப் நடைபெற்றது.

நுலரெலியா கூட்டுறவு விடுதியில் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனமும் மலையக மக்கள் முன்னணியும் இணைந்து நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்த இந்த செயலமர்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.எஸ்.இராதாகிருஷ்ணன் கலந்துகொண்டார். (க)

## வேகத்தை கட்டுப்படுத்துமாறு சாரதிகளுக்கு அறிவுறுத்தல்!



கொழும்பு, நவ. 01

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக அதிவேக நெடுஞ்சாலையில் வாகனங்களை செலுத்துவோர் கூடுதலாக கவனம் செலுத்த வேண்டும் என்று அதிவேக நெடுஞ்சாலை தகவல் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலமையில் மணித்தியாலத்திற்கு 50 முதல் 60 மீற்றர் வேகத்திற்கு வாகனங்களைச் செலுத்துமாறு சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏற்படக்கூடிய விபத்துக்களை குறைப்பதற்காக இரண்டு வாகனங்களிற்கு இடையிலான இடைவெளியை 2 மீற்றராக வைத்துக் கொள்ள வேண்டும் என்று சாரதிகளிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சீரற்றகாலநிலைக்கு மத்தியில் அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெறக்கூடிய கட்டுப்படுத்தி கொள்ளுமாறு அத்திணைக்களம் மேலும் சாரதிகளிடம் கேட்டு கொண்டுள்ளது.


## மன்னார் நானாட்டானில் கடும் மழையால் வீதியில் சரிந்து விழுந்த பெரிய மரம்!

கொழும்பு, நவ.01

மன்னார் நானாட்டான் உயிலங்குளம் பிரதான வீதியில் பெரிய மரம் ஒன்று சரிந்து வீழ்ந்ததில் மோட்டார் சைக்கிள் ஒன்று கடும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளது.

மன்னாரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பெய்த கடும் மழை காரணமாக நானாட்டான் உயிலங்குளம் பிரதான வீதியில் உள்ள வங்கி ஒன்றிற்கு முன்பாக காணப்பட்ட பெரிய மரம் ஒன்றே வேருடன் சரிந்து வீழ்ந்துள்ளது.

இதன் போது அப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் கடும் சேதத்திற்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.





## வீதி ஒழுக்க விதிமுறைகளை மதித்து செயற்பட்ட சாரதிகள் கௌரவிப்பு!



கொழும்பு, நவ. 01

வீதி ஒழுங்குகளை முறையாக கடைப்பிடித்து வாகனங்களைக் செலுத்திய சாரதிகள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

தவறு விளைவிக்கும் சாரதிகளுக்கு தண்டப்பண பற்றுச்சீட்டு வழங்கும் போக்குவரத்து தொழிற்பிரிவினால் வீதி ஒழுங்குகளை முறையாகக் கடைப்பிடித்து வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளை கண்டறிந்து பெறுமதிமிக்க பரிசுகளை வழங்கும் வேலைத் திட்டம் பொலிஸ் மா அதிபரால் அறிமுகப்படுத்தப் பட்டது.

ஒரு மாத குறுகிய காலப் பகுதியில் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சாரதிகள் கண்டறியப்பட்டிருக்கின்றனர் எனப் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்தார்.

பொலிஸ் மா அதிபர் மற்றும் இத்தெரிவுக்கான நிகழ்ச்சி நிரலுக்கு பங்களிப்பு வழங்கிய ஆசிரி மருத்துவமனையின் பணிப்பாளர் சபை டி.ஐ. பாதணி தாயாரிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் சபையில் இந்தப் பாராட்டு நிகழ்வு இடம் பெற்றது.

பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கமைவாக நடைமுறைப் படுத்தப்படும் அனைத்து வீதி ஒழுங்கு விதிகளையும் கடைப்பிடித்து வாகன சாரதிகளை கண்டறியும் பணியில் ஈடுபட்டுள்ள வாகன பொலிஸ் அதிகாரிகளுக்கும் , இந்த நடவடிக்கை தொடர்பாக ஊடகம் மூலம் தெளிவுபடுத்திய பொலிஸ் தலைமையக பொலிஸ் ஊடகப் பிரிவின் சேவையை கௌரவிக்கும் நிகழ்வொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

வீதி ஒழுங்கு விதி முறைகளை மதித்து செயற்படும் சாரதிகளை கண்டறிவதற்கான வேலைத்திட்டம் கொழும்பு கண்டி குருநாகல் போன்ற நகரங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரில் மாத்திரமே தற்போது வீதி ஒழுங்கு விதி முறைகளை மதித்து செயற்படும் சாரதிகள் கண்டறியப்பட்டிருந்தனர் என்றும் பொலிஸ் மா அதிபர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சாரதிகளுக்கு ஒழுக்க விதிமுறைகளை மதிக்கும் சான்றிதழ்களும் பரிசுகளும் இதன் போது வழங்கப்பட்டுள்ளன. (க)

காலைக்கதிர்
Kalaikkathir



# ‘ஜெ’ மரண விசாரணை 15 பேருக்கு நோட்டீஸ்

ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக 15 பேருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது எனவும் அவர்கள் பதிலளித்த பின்னர் விசாரணை தொடங்கும் என்றும் விசாரணை ஆணையத்தலைவர் ஆறுமுகசாமி தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா உடல் நலக் குறைவு காரணமாக சென்னை, அப்பலோ மருத்துவமனையில் கடந்த ஆண்டு செப்ரெம்பர் 22 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார். 75 நாள்கள் தொடர் சிகிச்சைக்குப் பின்னர் அவர் டிசெம்பர் 5 ஆம் திகதி காலமானார்.

இந்த நிலையில், ஜெயலலிதாவின் மரணத்தில் மர்மம் இருக்கின்றது என குற்றச்சாட்டுகள் எழுந்தன. மேலும், இது தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கோ, நீதி விசாரணைக்கோ உத்தரவிட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.



15 பேருக்கு நோட்டீஸ்

அதனைத் தொடர்ந்து, சென்னை உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையில் விசாரணைக் குழுவை அமைத்து தமிழக அரசு செப்ரெம்பர் 25ஆம் திகதி உத்தரவிட்டது.

இந்த நிலையில், கோவையில் உள்ள தனது உறவினர் வீட்டுத் துக்க நிகழ்வில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் வந்த ஆறுமுகசாமி, செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணம் தொடர்பாக 15 பேருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் பதில் அளித்த பின்னரே அடுத்த கட்ட விசாரணை



தொடங்கும் என்று தெரிவித்துள்ளார். (ப)

## ஹார்வாட் இருக்கைக்காக ஏ.ஆர்.ரகுமான் நிதியுதவி

ஹார்வாட் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்கு கனடா இசை நிகழ்ச்சி மூலம் ஏ.ஆர்.ரகுமான் நிதியுதவி வழங்கியுள்ளார்.

அமெரிக்காவின் ஹார்வாட் பல்கலைக்கழகத்தில் அமையவிருக்கும் தமிழ் இருக்கைக்காக 25ஆயிரம் டொலர் களைக் கடந்த வாரம் தனது இசை நிகழ்ச்சியின்போது வழங்கியிருக்கிறார் ஏ.ஆர்.ரகுமான்.

ஹார்வாட் தமிழ் இருக்கைக்காக உலகெங்கும் உள்ள தமிழர்கள் நிதி உதவி அளித்து வருகின்றனர். தமிழக அரசு 10 கோடி ரூபாவை வழங்க உள்ளது என நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. இந்த நிலையில் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானும் தன் பங்களிப்பாக 25 ஆயிரம் டொலர்களை வழங்கியுள்ளார். கனடாவின் ரொரன்டோ நகரில் கடந்த ஒக்ரோபர் 20-21 ஆம் திகதிகளில் ரகுமானின் இசைக் கச்சேரி நடந்தது. இந்த நிகழ்ச்சியில் திரண்ட பணத்தில் ஒரு பகுதியை இருக்கை நிதிக்காக வழங்கினார். (ப)



## இந்தியா செல்லும் பூட்டான் மன்னர்


காத்மண்டு,நவ.01

பூட்டான் மன்னர் ஜிக்மே கேஷர் நம்கேல் வாங்சுக் 4 நாள்கள் அரசு முறைப் பயணமாக தனது மனைவியுடன் இன்று இந்தியா செல்லவுள்ளார்.

நவம்பர் மூன்றாம் திகதி வரை இந்தியாவில் தங்கி இருக்கும் பூட்டான் மன்னர், ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், பிரதமர் நரேந்திர மோடி, துணை ஜனாதிபதி வெங்கய்யா நாயுடு, வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் மத்திய அமைச்சர்களைச் சந்தித்து இருநாடுகளுக்கும் இடையிலான நல்லுறவுகளை பலப்படுத்துவது தொடர்பில் ஆலோசனை நடத்தவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பூட்டான்மன்னர், அவரது மனைவியும் அரசியுமான கியால்ட்ஸ்யூன் ஜெட்சன் பேமா வாங்சுக் மற்றும் நேபாளக் குழுவினருக்கு டில்லியில் பிரதமர் நரேந்திர மோடி விருந்துபசாரமும் அளிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# காந்தி கொலை வழக்கு விசாரிக்க மீண்டும் எதிர்ப்பு



புதுடில்லி,நவ.01

காந்தியின் கொலை வழக்கை மீண்டும் விசாரிக்க எதிர்ப்புத் தெரிவித்து அவரது கொள்ளுப்பேரன் துஷார் காந்தி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

தேசத்தந்தை மகாத்மா காந்தி கடந்த 1948ஆம் ஆண்டு டில்லியில் சுட்டுக்கொல்லப்பட்டார். இது தொடர்பாக நதுராம் கோட்சே, நாராயண் ஆப்தே ஆகியோர் கைது செய்யப்பட்டு 1949ஆம் ஆண்டு தூக்கில் போடப்பட்டனர்.

காந்தி கொல்லப்பட்டு சுமார் 70 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், இந்தக் கொலை வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டும் என மும்பையைச் சேர்ந்த பங்கஜ் பட்னிஸ் என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

காந்தியின் கொலையில் 3ஆவது நபர் இருந்ததற்கான ஆதாரம் இருக்கின்றது எனவும் அதுகுறித்து விரிவாக விசாரிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டு இருந்தார். இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம், இதில் நீதிமன்றத்திற்கு உதவுவதற்காக மூத்த வழக்கறிஞர் அம்ரேந்தர் சரணை நியமித்தது.

இந்த நிலையில், காந்தியின் கொலை வழக்கை மீண்டும் விசாரிக்க எதிர்ப்புத் தெரிவித்து அவரது கொள்ளுப்பேரன் துஷார் காந்தி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.ஏ.பாப்டே, எம்.எம். சந்தானகவுடர் ஆகியோரை கொண்ட அமர்வு முன்பு நேற்று முன் தினம் விசாரணைக்கு வந்தது.

அப்போது, இந்த விடயத்தில் தனக்குத் தேவையான ஆவணங்கள் இன்னும் கிடைக்காதமையால், 4 வாரம் அவகாசம் வேண்டும் என அம் ரேந்தர் சரண் நீதிபதிகளிடம் கேட் டார். இதை ஏற்றுக்கொண்ட நீதி பதிகள், இந்த மனு மீதான விசாரணையை 4 வாரங்களுக்கு ஒத்தி வைத்துள்ளனர். (ப)

## கனமழை எதிரொலி:

# தயார் நிலையில் தேசிய பேரிடர் மீட்புக் குழு




சென்னை,நவ.01

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை வலுத்துள்ள நிலையில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணியை மேற்கொள்ள 9 தேசியப் பேரிடர் மீட்புக்குழுவினர் தயாராக உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் மற்றும் புதுவையில் நேற்று முன்தினம் தொடங்கிய வடகிழக்குப் பருவமழை எதிர்வரும் 4ஆம் திகதி வரை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த நிலையில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகளை மேற்கொள்ள 9 தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் தயாராக உள்ளனர் என கூறப்பட்டுள்ளது.

குழு ஒன்றில் 45 பேர் இருப்பார்கள் என்றும் தேவைக்கேற்ப மீட்புக்குழுவின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சென்னை மற்றும் அரக்கோணம் முகாம்களில் இந்த வீரர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும், படகு உள்ளிட்ட மீட்புப் பணிக்குத் தேவையான பொருள்கள் தயார் நிலையில் உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# போகோ ஹரம் தீவிரவாதிகள் தாக்கு; நைஜீரியா, கமரூனில் 10 பேர் சாவு!







மைடுகுரி,நவ.01

நைஜீரியா மற்றும் கமரூனில் போகோஹரம் தீவிரவாதிகள் நடத்திய வெவ்வேறு இரு தாக்குதல் சம்பவங்களில் 16 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கமரூன் மற்றும் நைஜீரிய நாட்டின் எல்லைப்பகுதியில் போகோஹரம் தீவிரவாதிகள் அரசுக்கு எதிராகத் தீவிரவாதத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இவர்களை ஒடுக்குவதற்கான போரில் பன்னாட்டு இராணுவ வீரர்கள் அடங்கிய படை ஈடுபட்டு வருகின்றது.

இந்த நிலையில், வடக்கு கமரூனின் கொலொபடா பகுதியில் உள்ள கவுடேரி கிராமத்தில் சில போகோஹரம் தீவிரவாதிகளைக் கடந்த சில நாள்களுக்கு முன்னர் பொலிஸார் கைது செய்துள்ளனர். இதனையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அப் பகுதிக்குள் நுழைந்த தீவிரவாதிகள், 11 பேரைக் கொடூரமாகக் கொலை செய்துள்ளனர். இது முன்னர் நடத்தப்பட்ட கைது சம்பவத்திற்கு பழி வாங்குவதற்காக நடத்தப்பட்டது எனக் கூறப்படுகிறது.

நைஜீரிய நாட்டின் போர்னோ மாநிலத் தலைநகரான மைடுகுரி நகரின் மத்திய பகுதியில் உள்ள அஜ்ரியாலா பகுதியில் பிரபலமான மசூதி ஒன்றுள்ளது. நேற்று முன்தினம் அதிகாலை சுமார் 4:30 மணியளவில் (உள்ளூர் நேரப்படி) இந்த மசூதிக்குள் ஒரு தீவிரவாதி உடல் முழுவதும் வெடிகுண்டைக் கட்டிக் கொண்டு புகுந்துள்ளான்.

அவன் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளைத் திடீரென்று வெடிக்க செய்ததில் ஐந்து பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். படுகாயமடைந்த மூன்று பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ப)

## ஐ.எஸ்.தீவிரவாதிகளின் புதிய கொலை பட்டியலில் ட்ரம்ப்



வொஷிங்டன்,நவ.01

ஐ.எஸ். தீவிரவாதிகள் புதிதாக ஒரு கொலைப் பட்டியலை வெளியிட்டுள்ளனர். அதில், அமெரிக்க புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உட்பட 8 ஆயிரத்து 786 பேரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

ஐ.எஸ். தீவிரவாதிகள் உலகத் தலைவர்கள் பலருக்கு அச்சுறுத்தலாக உள்ளனர். அவர்கள் அடிக்கடி கொலைப் பட்டியலை வெளியிட்டு வருகிறாள்கள் அவர்களின் கொலைப் பட்டியலில் உள்ள தலைவர்களை கொல்வதற்கு தனி ஓநாய் தாக்குதல் என்று பெயரிட்டுள்ளனர்.

இதன்படி தனி ஆளாகச் சென்று தலைவர்களை துப்பாக்கியால் சுட்டோ அல்லது வேறு மாதிரியோ கொல்வது திட்டம் ஆகும்.

தற்போது ஐ.எஸ். தீவிரவாதிகள் புதிதாக ஒரு கொலைப் பட்டியலை வெளியிட்டுள்ளனர். அதில், அமெரிக்க புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உட்பட 8 ஆயிரத்து 786 பேரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

அவர்களில் பெரும்பாலானோர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள். அமெரிக்க அரசியல் தலைவர்கள், இராணுவத்தளபதிகள், உளவுத்துறை நிபுணர்கள் மற்றும் தீவிரவாதிகள் தாக்குதலைக் கண்டிக்கும் முஸ்லிம் தலைவர்கள் ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

இந்தக் கொலைப் பட்டியலில் உள்ளவர்களின் முகவரி, மின்னஞ்சல் முகவரி என அனைத்து விவரங்களும் அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இதை அவர்கள் இணையத் தளத்தில் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் ஒரு வீடியோவும் இணைக்கப்பட்டுள்ளது. அதில் பேசியவர், உங்களுக்கு எதிராக எங்களுடைய போர் தொடரும். நீங்கள் எங்களுக்கு எதிராக நடத்தும் ஒவ்வொரு போரும் எங்களை மேலும் வலுவாக்கி வருகின்றது. (ப)

## ட்ரம்பின் உத்தரவுக்கு நீதிமன்றத்தில் தடை



வொஷிங்டன்,நவ.01

அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகள் சேர்கின்றமையை அனுமதிக்க மறுக்கும் ட்ரம்பின் உத்தரவுக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகளைச் சேர்க்கும் திட்டத்தை முன்னாள் அதிபர் பராக் ஒபாமா கொண்டு வந்தார். இந்தத் திட்டத்தை பலரும் ஆதரித்தனர். ஆனால், அதிபராக ரொனால்ட் ட்ரம்ப் பொறுப் பேற்றபின் அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகள் சேர்கின்றமை வரும் ஜனவரி முதலாம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த நிலையில், அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகள் சேர அனுமதி கிடையாது என்று அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஓகஸ்ட் மாதம் உத்தரவு பிறப்பித்தார். ட்ரம்பின் இந்த அறிவிப்பால் அமெரிக்க இராணுவத்தின் அனைத்து பிரிவுகளிலும் பணி புரியும் சுமார் 13 லட்சம் திருநங்கைகள் பாதிக்கப்பட்டனர்.

ட்ரம்பின் இந்த உத்தரவை எதிர்த்துப் பலர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கை விசாரித்த மாவட்ட நீதிமன்றம் ட்ரம்ப்பின் இந்த உத்தரவிற்குத் தடை விதித்துப் புதிய உத்தரவு பிறப்பித்தது.

## திடீரென பதவி விலகினார் குவைத் நாட்டின் பிரதமர்!



குவைத்,நவ.01

குவைத் நாட்டின் பிரதமர் ஷேக் ஜாபர் முபாரக் அல் சபா நேற்று முன் தினம் திடீரென்று பதவி விலகியுள்ளார்.

குவைத் நாட்டின் பிரதமர் ஷேக் ஜாபர் முபாரக் அல் சபா நேற்று முன் தினம் திடீரென்று பதவி விலகியுள்ளார். இவரின் பதவி விலகல் குவைத் அமீர் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என அரசு அறிவித்துள்ளது. அமைச்சர் சபை கலைக்கப்பட்ட நிலையில் புதிய அரசு அமையும் வரையில் அடுத்த தேசிய சட்டமன்ற கூட்டம் நடைபெறாது என சபாநாயகர் மர்சூக் அல் கானிம் கூறியுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம்தான் புதிய அரசு அமைக்கப்பட்டது. இந்த நிலையில் நாடாளுமன்றம் தற்போது கலைக்கப்பட்டு இருக்கின்றது. கடந்த வியாழக்கிழமை நடந்த தேசிய சட்ட மன்ற கூட்டத்தில் பேசிய சபாநாயகர் மர்சூக் அல் கானிம் நடப்பு அரசு கலைக்கப்படும் வாய்ப்பு உள்ளது எனக் கருத்துத் தெரிவித்து இருந்தார். இந்த நிலையில் தகவல் தொடர்பு அமைச்சர் முகம்மது அல் சபா கூறிய போது-

சட்டம் இயற்றக்கூடிய பணியில் உள்ளவர்கள் பட்ஜெட் மற்றும் சட்ட விதிகளை மீறி நிர்வாகத்தைச் சரி வரக் கவனிக்காததமையாலேயே நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.- என்றார். (ப)



# பாகிஸ்தானுக்கு ஒத்துழைப்பு நல்குவது மகிழ்ச்சி அளிக்கிறது

## திலங்க சுமதிபால

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை வழமையான அடிப்படையில் நடத்துவதற்காக பாகிஸ்தான் எடுத்துவரும் முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்குவதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தலைவர் திலங்க சுமதிபால உறுதி வழங்கியுள்ளார்.

பாகிஸ்தானுடனான மூன்று போட்டிகள் கொண்ட சர்வதேச இருபது : 20 கிரிக்கெட் தொடரின் கடைசிப் போட்டியில் விளையாடுவதற்காக இலங்கை அணி விஜயம் செய்தபோது லாகூரில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் திலங்க சுமதிபால இந்த உறுதிப்பாட்டை வழங்கினார். இந்தத் தொடரின் முதல் இரண்டு போட்டிகள் நடுநிலையான அபுதாபியில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

நாங்கள் 30 வருடகால யுத்தத்தை அனுபவித்துள்ளமையால் தனிமைப்படுத்தப்படுவதன் அர்த்தத்தை நன்கு அறிவோம். இலங்கையில் 30 வருடங்களுக்கு மேல் யுத்தம் நடந்தது. ஆனால், இலங்கையில் இரண்டு அணிகளுக்கும் இடையில் விளையாடுவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட எந்த ஒரு போட்டியையும் பாகிஸ்தான் இரத்துச் செய்ததில்லை என்றார் திலங்க சுமதிபால.

மாறுபட்ட மனிதர்கள் இருக்கின்றார்கள். சிறுவர்கள், பெண்கள் ஆகியோரையும் சமய வழிபாட்டுத் தளங்கள், விளையாட்டுத்துறை ஆகியவற்றையும் விட்டு ஒதுங்கியிருங்கள் என அவர்களிடம் நாங்கள் கோருகின்றோம். எங்களை விட்டுவிடுங்கள். அமைதியாகவும் ஒத்திசைவுடனும் கிரிக்கெட் விளையாட அனுமதியுங்கள்.

கிரிக்கெட் விளையாட்டை நாங்கள் ரசிக்க வேண்டும் என்பதுடன் எல்லோருக்கும் சந்தர்ப்பங்களை வழங்க விரும்புகின்றோம். அத்துடன் விளையாட்டில் உள்ள மகிழ்ச்சியை பகிர்வதற்கான வாய்ப்பையும் தாருங்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

நல்லதோ, கெட்டதோ, பாகிஸ்தான் கிரிக்கெட்டும் அரசும் இலங்கைக்கு ஆதரவு வழங்கியது. இது வெறும் அரசுடன் தொடர்புடைய விடயமல்ல. இலங்கைக்கு எதிராகக் கடைசியாக இடம்பெற்ற சம்பவத்தை நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள். அப்போதிருந்த உணர்வுகள் வேறு. எனவே இதற்கான ஆரம்பத்தையிட்டு பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு உதவவேண்டும் என நாங்கள் எண்ணினோம் என திலங்க மேலும் தெரிவித்தார்.

கிரிக்கெட்டில் பாகிஸ்தான் பலவீனமடைந்தால் ஆசிய கிரிக்கெட்டும் பலவீனமடையும். அது உலகக் கிரிக்கெட்டை மேன்மேலும் பலவீனமடையச் செய்யும். உங்கள் பலமே எங்கள் பலம். நாம் ஒருவரை ஒருவர் கவனித்துக்கொள்கின்றமை எமது பொறுப் பாகும். அதனை நாங்கள் உறுதியாக நம்பு கின்றோம்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தைப் பொறுத்தமட்டில் பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குவது மகிழ்ச்சி தருவதுடன் அது எமது கடப்பாடாகவும் கருதுகின்றோம் என திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

# பி.சி.சி.ஐயின் முன்னாள் முகாமையாளர் மரணம்



இந்திய கிரிக்கெட் சபையின் முன்னாள் முகாமையாளரும், ஐதராபாத் அணியின் முன்னாள் தலைவருமான எம்.வி. ஸ்ரீதர் மாரடைப்பால் காலமானார்.

இந்திய கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் செயற்பாட்டு ஜெனரல் முகாமையாளராகச் செயற்பட்டு வந்தவர் எம்.வி. ஸ்ரீதர். 51 வயதாகும் இவர் மாரடைப்பால் காலமானார். இவர் ஐதராபாத் அணிக்காக 1988-89 முதல் 1999-2000 வரை விளையாடி 6 ஆயிரத்து 701 ஓட்டங்களைக் குவித்துள்ளார். 1993-94 இல் ஆந்திராவிற்கு எதிராக முச்சதமும் அடித்துள்ளார்.

இவர் இந்திய கிரிக்கெட் சபையில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். 2007-08இல் ஆஸ்திரேலியா இந்தியா வரும்போது இந்திய கிரிக்கெட் அணியின் முகாமையாளராகச் செயற்பட்டுள்ளார். கடந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற ரி-20 கிரிக்கெட் தொடருக்கான இயக்குனராகவும் செயற்பட்டுள்ளார்.

# கோஹ்லி சிறந்த வீரர் -வாகன்



இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று விளையாடியது.

இதில் தொடரை இந்திய அணி 2:1 என்ற கணக்கில் வென்று அசத்தியது. இந்த நிலையில் இத்தொடரின் மூன்றாவது ஒருநாள் போட்டியின் போது இந்திய அணியின் தலைவர் கோஹ்லி சதம் கடந்து 113 ஓட்டங்களைக் குவித்தார்.

அதுமட்டுமின்றி இத்தொடரில் இரண்டு சதம் என மொத்தம் 263 ஓட்டங்கள் குவித்த அவருக்கு தொடர் நாயகன் விருது வழங்கப்பட்டது.

இதனையடுத்து ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் அதிவேகமாக 9000 ஓட்டங்களை எடுத்த வீரர் என்ற பெருமையும் கோஹ்லியையே சாரும். இந்த நிலையில் இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் மைக்கல் வாகன் தனது டுவிட்டர் பக்கத்தில், ஒருநாள் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரர் கோஹ்லியா என்ற கேள்விக்கு என்னிடம் எந்த வாக்குவாதமும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

# “தெரண லிட்டில் ஹார்ட்”வைத்தியசாலைக்கான மரதன் ஓட்டப்போட்டியில் இராணுவத்தினர்

‘‘தெரண லிட்டில் ஹார்ட்’’ எனும் சிறுவர்களுக்கான இதய மாற்றுச் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கான வைத்தியசாலை அமைக்கும் திட்டத்திற்கு உதவும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியில் இராணுவத்தினர் பங்கேற்றனர்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்தப்போட்டி பௌத்த லோக மாவத்தை, டீ எஸ் சேனாநாயக்க சந்தி, வாட் பிலேஸ், தாமரைத் தடாகம், சி டபிள்யூ டபிள்யூ கண்ணங்கரா மாவத்தை போன்ற வீதிகளினூடாகச் சென்று சுதந்திர சதுக்கத்தில் முடிவடைந்தது.



இந்த மரதன் ஓட்டப் போட்டியில் பெண்களுக்கான முதலாம் இடத்தை இலங்கை இராணுவ மகளிர்ப் படையணியின் வீராங்கனை கோப்பிரல் என்.ஜி. ராஜசேகர பெற்றமையுடன் இலங்கை இராணுவச் சேவைப் படையணியின் வீராங்கனையான சார்ஜன்ட் கே.ஜி.ஆர். சமன் குமார தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டதுடன் இலங்கை இராணுவ 7ஆவது மகளிர் படையணியின் சதாரண படை வீராங்கனை யூ.கே.என். ரத்நாயக்க மற்றும் இலங்கை இராணுவ 6ஆவது மகளிர்ப் படையணியின்(தொண்டர்) சாதாரண படை வீராங்கனை யூ.வீ.கே. மதுரிகா போன்றோர் வெண்கலப் பதக்கங்களையும் வென்றுள்ளனர்.

ஆண்களுக்கானபிரிவில் இலங்கை பீரங்கிப் படையணியின் சாதாரண படைவீரர் கே.சம்முகேஷ்வரன் மற்றும் கே.ஜயசிங்க போன்றோர் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## லா லிகா உதைபந்து:

# ரியல் மாட்ரிட்டை வீழ்த்திய ஜிரோனா






லா லிகா உதைபந்துத் தொடரில் பலம் வாய்ந்த ரியல் மாட்ரிட் அணியை 2:1 என வீழ்த்தி ஜிரோனா அதிர்ச்சி அளித்துள்ளது.

ஸ்பெயின்நாட்டின்முன்னணி உதைபந்து கிளப் அணிகளுக்கு இடையிலான 2017-18 பருவகால 'லாலிகா' லீக்தொடர்நடைபெற்று வருகின்றது. நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு போட்டியில் முன்னணி அணியான ரியல் மாட்ரிட், கட்டலோனியா ஜிரோனா அணியை எதிர்கொண்டது.

அரசியல் நெருக்கடிக்கிடையே ஜிரோனா அணி களம் இறங்கியது. ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் ரியல் மாட்ரிட் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ கோல் நோக்கி அடித்த பந்தை ஜிரோனா கோல் காப்பாளர் தடுத்தார். பந்து அவரது கையில் பட்டுத் திரும்பியது. அதை இஸ்கோ அருமையான வகையில் கோலாக மாற்றினார். இதனால் ரியல் மாட்ரிட் அணி 1:0 என முன்னிலை பெற்றது. அதன்பின் இரு அணி வீரர்களும் கோல் அடிக்கவில்லை. ஆகவே முதல் பாதி நேரத்தில் ரியல் மாட்ரிட் 1:0 என முன்னிலை பெற்றது.

2ஆவது பாதி நேரத்தில் ஜிரோனா அணி வீரர்கள் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். 54ஆவது நிமிடத்தில் ஸ்டுயானி ஒரு கோலும், 58 ஆவது நிமிடத்தில் போர்டு ஒரு கோலும் அடித்தனர். அடுத்தடுத்து இரண்டு கோல்கள் அடித்து ரியல் மாட்ரிட்டுக்கு அதிர்ச்சி அளித்தது ஜிரோனா அணி.

பின்னர் ரியல் மாட்ரிட் அணியால் பதில் கோல் அடிக்க இயலவில்லை. ஜிரோனா மேலும் கோல் அடிக்க முயற்சி செய்யாமல் தடுப்பு ஆட்டத்தில் அதிக கவனம் செலுத்தினர். இதனால் ரியல் மாட்ரிட் கோல் அடிக்க முடியவில்லை. இறுதியில் ஜிரோனா 2:1 என வெற்றி பெற்று ரியல் மாட்ரிட் அணிக்கு அதிர்ச்சி கொடுத்தது.

தற்போது வரை ரியல் மாட்ரிட் 10 போட்டிகளில் முடிவில் 20 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தில் உள்ளது. பார்சிலோனா 10 ஆட்டத்தில் 28 புள்ளிகளுடன் முதல் இடத்தில் நீடிக்கின்றது. நடப்பு சம்பியனான ரியல் மாட்ரிட் இந்தப் பருவகால ஆட்டத்தில் 2 தோல்விகளைச் சந்தித்துள்ளது. 6 வெற்றியும், இரண்டு போட்டியை சமநிலையும் செய்துள்ளது.

# டோனியை விமர்சிக்க வேண்டாம்

## டிராவிட் தெரிவிப்பு





இந்திய அணியின் முன்னாள் தலைவர் டோனி பற்றி யாரும் விமர்சிக்க வேண்டாம் எனவும் ஓய்வு தொடர்பாக அவரே முடிவு செய்வார் எனவும் ராகுல் டிராவிட் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றிகரமான தலைவர் மகேந்திரசிங் டோனி. இரண்டு உலகக் கிண்ணங்களை வென்று அவர் நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளார். 2007ஆம் ஆண்டு 20 ஓவர் உலகக் கிண்ணத்தையும் , 2011இல் ஒருநாள் போட்டி உலக கிண்ணத்தையும் பெற்றுக் கொடுத்தார்.

2014ஆம் ஆண்டு இறுதியில் டோனி டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றார். கடந்த ஜனவரி மாதம் அவர் ஒருநாள் போட்டி மற்றும் 20 ஓவர் தலைவர் பதவியில் இருந்து விலகினார். ஒருநாள் போட்டி மற்றும் 20 ஓவர் அணியில் மட்டும் டோனி விளையாடி வருகின்றார்.

36 வயதான டோனி, 2019 உலகக்கிண்ணம் வரை விளையாடுவாரா? என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு தொடரிலும் அவர் மீதான நெருக்கடி தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. 2019 உலகக் கிண்ணத்திற்குச் சிறந்த அணியை உருவாக்கும் பொருட்டு வீரர்களைத் தேர்வுக் குழு உருவாக்கி வருகிறது.

இந்த நிலையில், சிறப்பாக ஆடினால் மட்டுமே டோனி அணியில் நீடிக்க முடியும்.2019 உலகக் கிண்ணத்திற்கு முன்பே டோனி ஓய்வு முடிவை அறிவிக்க வேண்டும் என்றும் விமர்சிக்கப்பட்டு வருகின்றது. ஓய்வு தொடர்பாக அவர் இதுவரை எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் டோனியை யாரும் விமர்சிக்க வேண்டாம் என்று முன்னாள் அணித் தலைவரும் ராகுல் டிராவிட் வலியுறுத்தி உள்ளார்.

டோனி, கோஹ்லி போன்ற சிறந்த வீரர்கள் தங்கள் ஓய்வை தாங்களே முடிவு எடுப்பார்கள். டோனியின் ஓய்வு தொடர்பாக ரசிகர்கள் இடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகிறது. ஆனால் அவரை தேர்வு குழு தேர்ந்தெடுத்தால் இந்திய அணிக்காக அவர் விரும்பும் வரை விளையாட முடியும் என்று தெரிவித்துள்ளார்.

# இலங்கை வீரர்களை பாராட்டிய பாக். ரசிகர்கள்

பாகிஸ்தான் அணி இலங்கைக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி-20 தொடர்களை முழுவதுமாக கைப்பற்றியது.

கடைசி ரி-20 போட்டி பாகிஸ்தானில் நடந்தபோது பாகிஸ்தானிய ரசிகர்கள் பலர் இலங்கை தேசிய கொடிகளை கைகளில் ஏந்தி அசைத்தனர்.

பாகிஸ்தானுக்கு மீண்டும் விளையாட வந்த இலங்கை வீரர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக அவர்கள் கொடிகளை ஏந்தியிருந்தனர்.

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு பாகிஸ்தானில், இலங்கை வீரர்கள் சென்ற பஸ் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளானது.

எனினும் தற்போது பாகிஸ்தானில் விளையாட வந்திருக்கும் இலங்கை வீரர்களின் மனதைரியத்தைப் பாராட்டுகின்றோம் எனவும், இதன் மூலம் தாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளோம் எனவும் ரசிகர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிகழ்வு வரலாற்றில் மறக்க முடியாத ஒரு பதிவாக இருக்கும் என பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.



## 3 கைதிகளையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'அநுராதபுரம் சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் சிறைக் கைதிகள்' என்ற தலைப்பில் சந்திரிகா குமாரதுங்கவுக்கு முதல்வர் விக்னேஸ்வரன் எழுதிய கடிதத்தின் முழு விவரம் வருமாறு:–

மிகவும் பலத்த எதிர்பார்ப்புக்களுடன் இக்கடிதத்தைத் தங்களுக்கு எழுதுகின்றேன். தாங்கள் எமது நாட்டில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் பாரிய பணியை ஏற்றிருக்கின்றீர்கள். அதனால் தாங்கள் அநுராதபுரம் சிறைச்சாலைகளில் உண்ணாவிரதமிருக்கும் சிறைக்கைதிகளின் பரிதாபகரமான நிலையை விரைவில் கவனத்தில் கொள்வது பொருத்தமானதே.

அரசாங்கம் இம் மூவரின் வழக்கை வவுனியாவிலிருந்து அநுராதபுரத்திற்கு மாற்றியது வழக்கின் சாட்சிகளுக்குப் பாதுகாப்பளிப்பதற்கல்ல என்பது போல்தெரிகிறது. சாட்சியாளர்கள் வெளிநாடு சென்றுவிட்டார்கள் என்றும் அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பது தெரியவில்லையென்பதே உண்மையென்றும் அறிய வருகின்றது. அவர்கள் இருக்குமிடம் தெரிந்திருந்தால் கூட அரசு அவர்களை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தெரிகிறது. ஆகவே பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அவர்களின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் மட்டுமே அவர்களைக் குற்றவாளிகளாகக் காண்பதே அரச தரப்பாரின் நோக்கமெனத் தெரிகிறது.

நான் உயர் நீதிமன்றத்தில் நீதியரசராக இருக்கையில் 'நாகமணி' வழக்கில் கொடுத்த தீர்ப்பு எல்லோரும் அறிந்ததே. அதனை உதாரணமாக வைத்து பல நீதிமன்றங்கள் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்ட சம்பவம் இடம்பெற்றதை உறுதிப்படுத்துவதற்கு ஆதரவாக இன்னொரு அனுசரணைச் சாட்சியத்தைவலியுறுத்தியிருந்தார்கள்.

நான் அந்த வழக்கில் குறிப்பிட்டவையாவன:–

தனியே ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் வேறு ஓர் அனுசரணைச் சாட்சியமின்றி ஒருவரைக் குற்றவாளியாகக் காண்பது சரியான தீர்ப்பாக இருக்க முடியாதென்பதே. உதாரணத்திற்கு 'X' என்னும் ஒருவரை தான் கொன்றுவிட்டார் என ஒருவர் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ள போது 'X' என்பவர் உயிருடன் இருந்தால் எப்படியிருக்கும்? மட்டக்களப்பில் ஒரு இராணுவமுகாமைத் தாக்கி யழித்து விட்டதாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கப்பட்டது. ஆனால் இராணுவம் அப்படியெதுவும் இடம்பெறவில்லை என சாட்சியம் அளித்து குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பொய்யாக்கியது.

அநுராதபுரம், பொலன்னறுவை போன்ற சில நீதிமன்றங்கள் எனது தீர்ப்பிற்கான காரண முடிவை ஏற்க மறுத்துள்ளன. கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் பல நீதிமன்றங்கள் ஒரு விதத்திலான சுதந்திரமான அனுசரணைச் சாட்சியங்கள் மூலம் நடைபெற்ற சம்பவங்களை உறுதிப்படுத்தக் கோரியுள்ளன.

அரசுக்கு இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருப்போரை அரசியல் காரணங்களுக்காக குற்றவாளிகளாகக் காண வேண்டிய தேவை இருப்பது போல் தெரிகிறது. விசாரணை ஆரம்பமாக முன்னரே அமைச்சர் ருவான் விஜயவர்த்தன உண்ணாவிரதமிருக்கும் சிறைக்கைதிகளை விடுதலைப் புலிகள் என முத்திரை குத்திவிட்டார். சிறைக் கைதிகள் தாங்கள் விடுதலைப் புலிகளுடன் எந்தவிதமான தொடர்புகளும் அற்றவர்கள் எனக் கூறினர் என எனக்குச் சொல்லப்பட்டது. ஆனபடியால் அவர்களை யாரென அடையாளப்படுத்த முன் நாங்கள் பொறுமையுடன் நீதிமன்ற விசாரணையை எதிர்பார்த்திருத்தல் வேண்டும். விசாரணைக்கு முன்னரே கௌரவ ருவான் விஜயவர்த்தன விடுதலைப்புலிகள் என அவர்களைக் குறிப்பிட்டமை அவருடைய கண்ணியமற்ற – பொறுப்பற்ற – தனத்தையே காட்டுகிறது.

எப்படியிருப்பினும் சாட்சிகளின் நன்மைக்காக மட்டும் வழக்குகளை ஒரு நீதிமன்றிலிருந்து இன்னொன்றுக்கு மாற்றுதல் நியாயமானதல்ல. சாட்சிகளை பாதுகாப்பது அரசின் கடமை. வடமாகாணத்தில் 150,000 இராணுவத்தினர் உள்ளனர். இவ்வழக்கின் சாட்சிகளின் பாதுகாப்பிற்காக வழக்கை வவுனியாவிலிருந்து அநுராதபுரத்திற்கு மாற்றுவதென்பது வேடிக்கையானது. இவ்வளவு எண்ணிக்கையான இராணுவத்தாலும் பொலிஸினாலும் இவர்களுக்கு போதுமான பாதுகாப்பை அளித்திருக்க முடியும்.

நான் அறிந்த அளவில் மூன்று சாட்சியாளர்களில் எவரும் பாதுகாப்பு வழங்கும்படி கேட்டனர் என்றோ அல்லது அவர்கள் இலங்கையில் இப்பொழுது இருக்கின்றனர் என்றோ தெரியவில்லை.

சாட்சியாளர்கள் சட்டமா அதிபரிடமிருந்து பாதுகாப்புக் கோரியிருந்தால் அப்படியாகப் பெற்றுக் கொண்ட ஆவணத்தின் வகைமை சட்டமா அதிபர் பகிரங்கமாக வெளியிடவேண்டும்.

ஆகவே வழக்கை அநுராதபுரத்திற்கு மாற்றியமையானது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மட்டும் குற்றவாளிகளாகக் காணும் அரசியல் நோக்கமேயன்றி வேறெதுவும் இல்லை என்று தெரிகிறது.

அநுராதபுர மேல் நீதிமன்றம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டும் வைத்தே பலரைக் குற்றவாளிகளாகக் கண்டிருக்கிறது.

உண்ணாவிரதமிருக்கும் கைதிகளின் பரிதாபகரமான நிலையானது எந்தளவுக்கு வடக்கு, கிழக்கு மக்களின் மனங்களைப் பாதித்திருக்கின்றதென்பதை தாங்கள் இதுவரையில் உணர்ந்திருப்பீர்களென நினைக்கிறேன். அதி உத்தம ஜனாதிபதியின் யாழ்ப்பாண விஜயத்திற்கு முதல் நாள் எவ்வாறு வடபகுதியின் அன்றாட வாழ்க்கை ஸ்தம்பிதமடைந்திருந்ததென்பதை அறிந்திருப்பீர்களென நினைக்கிறேன். இவ்வாறான சூழ்நிலையில் தாங்கள் இவ் விடயத்தில் இவர்களின் வழக்குகளை, கைதிகளை வவுனியாவிற்குத் திருப்பி அனுப்புவதற்கு அல்லது யாழ்ப்பாண மேல் நீதிமன்றிற்கு மாற்றுவதற்கு உதவுவீர்களென நம்புகிறேன். இக்கஷ்டமான காலகட்டத்தில் உண்ணாவிரதமிருக்கும் கைதிகளின் அவலநிலையை உணர்ந்து தாங்கள் தலையிடுதல் மூலம் எங்கள் மக்கள் மத்தியில் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் கட்டியெழுப்ப உதவுவீர்கள் என நினைக்கிறேன். – என்று உள்ளது. (உ)

## ஆஸி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார உணவுவலுப்படுத்தல், பாதுகாப்பு, ஆள்கடத்தலுக்கு எதிராக ஒன்றிணைந்து பணியாற்றுதல் போன்றவை தொடர்பான பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார்.

அண்மையில் ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால விடுத்த வேண்டுகோளை ஏற்றே மல்கம் ரேன்புல் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்கிறார்.

தற்போது இஸ்ரேலுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள அவர், நாடு திரும்பும் வழியில் இலங்கைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பனை,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோருடன் டக்ளஸ் தேவானந்தா நேற்று மேற்கொண்ட விசேட கலந்துரையாடலின் போதே இவ்விணக்கம் காணப்பட்டுள்ளது என ஈ.பி.டி.பியின் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

மேற்படி கட்டளைச் சட்டத்தின் 52ஆவது அத்தியாயத்தின் (ஆ) பிரிவில், 'கித்துள் மரத்தைத் தவிர, கள்ளை உற்பத்தி செய்யும் மரங்கள் எவற்றிலும் கள் இறக்கப்படுதலாகாது' என்றும், (ஈ) பிரிவில், 'கித்துள் மரத்தைத் தவிர, வேறு ஏதேனும் மரத்திலிருந்து கள் எடுக்கப்படுதல் அல்லது கீழிறக்கப்படுதல் ஆகாது' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே அத்தியாயத்தின் சிங்கள மொழி மூலமான (ஆ) பிரிவில் 'கித்துள் மரம் தவிர்ந்த கள் உற்பத்தி செய்யப்படும் மரங்களிலிருந்தும் சீவல் தொழில் செயற்பாடுகள் செய்யக்கூடாது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்பதாக இதே அத்தியாயத்தில் இதே பிரிவுகளில் 'கித்துள், பனை, தென்னை தவிர்ந்த ஏனைய மரங்களிலிருந்து கள்ளிறக்கப்படுதலாகாது' என்றே குறிப்பிடப்பட்டிருந்த நிலையிலேயே தற்போது இந்த மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வடக்கு, கிழக்கில் வாழும் மக்களில் கணிசமானோரின் முக்கிய வாழ்வாதாரத் தொழிலாக கள் இறக்கும் தொழில் விளங்கிவரும் நிலையில் –

மேற்படி விடயம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதி அமைச்சருடன் கலந்துரையாடி, மேற்படி தொழிற்துறையை தடையின்றி முன்னெடுப்பதற்கும் இந்தத்தொழில் துறைசார்ந்தவர்களது வாழ்வாதாரத்தைப் பாதிக்காத வகையில் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதனிடையே தமது தொழில் துறை சார்ந்த நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் எவரும் குரல்கொடுக்காதிருந்த நிலையில் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சிக்கு இந்தத் தொழில்துறையை நம்பி வாழும் வடக்கு கிழக்கைச் சேர்ந்த மக்கள் டக்ளஸ் தேவானந்தாவுக்குத் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர் என ஈ.பி.டி.பி. செய்திக் குறிப்பு தெரிவித்தது.

இதனிடையே தமது தொழில் துறைசார்ந்த நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் எவரும் குரல்கொடுக்காதிருந்த நிலையில் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சிக்கு குறித்த தொழில்துறையை நம்பி வாழும் வடக்கு கிழக்கைச் சேர்ந்த மக்கள் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தமது நன்றிகளையும் தெரிவித்துவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## அ'புரக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரும் நகர்த்தல் பத்திரம் ஒன்றை அந்தக் கைதிகளின் சார்பில் மீளாய்வு மனுவைத் தாக்கல் செய்த சட்டத்தரணி நேற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்தார்.

இந்த மீளாய்வு மனு நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது அது சம்பந்தமாக எவரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. அதனால் அந்த மனுவை நீதிமன்றம் கையாளாமல் விட்டது.

இந்த நிலையிலேயே புதிய நகர்த்தல் விண்ணப்பம் நேற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

நீதிமன்றத்தின் வழக்குகள் பட்டியலில் மேற்படி மனு தொடர்பான விடயம் கடந்த திங்கட்கிழமை மேலதிக அட்டவணை வாயிலாக அறிவிக்கப்பட்டிருந்தமையால் அதைத் தாம் அறிய முடியவில்லை என்றும். –

ஆகவே அதற்காக மன்னித்து, இந்த மனுவை இன்று புதன்கிழமை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் –

அந்த நகர்த்தல் பத்திரத்தில் சட்டத்தரணி கோரியுள்ளார். (உ)

## அநுராதபுரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை மட்டும் அடிப்படையாக வைத்து ஒரு தீர்ப்பை – முடிவை – எடுக்க முடியாது என உயர் நீதிமன்ற நீதியரசராக இருந்து தாம் வழங்கிய தீர்ப்பை இந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார் நீதியரசர் விக்னேஸ்வன். அநுராதபுரம், பொலன்னறுவை போன்ற சில நீதிமன்றங்கள் தனது தீர்ப்பிற்கான அந்தக் காரண முடிவை ஏற்க மறுத்து வந்துள்ளன என்பதையும் தெரியப்படுத்தியுள்ளார்.

ஆனால், கொழும்பிலும் ஏனைய பகுதியிலும் பல நீதிமன்றங்கள் ஒரு விதத்திலான சுதந்திரமான அனுசரணைச் சாட்சியங்கள் மூலம் நடைபெற்ற சம்பவங்களை உறுதிப்படுத்தக் கோரி வந்துள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நீதியரசராகத் தாம் எடுத்த நிலைப்பாட்டுக்கு மாறான போக்குடைய அநுராதபுரம் மேல் நீதிமன்றம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஒப்புதல் வாக்கு மூலத்தை மட்டுமே வைத்துப் பலரைக் குற்றவாளியாகக் கண்டிருக்கின்றது என்பதையும் அவர் அம்பலப்படுத்தினார்.

அந்த நீதிமன்றத்துக்கே இந்த மூன்று கைதிகளினதும் வழக்குகள் வல்வந்தமாக இடம்மாற்றப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## சந்திரிகாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகின்றது.

'ஆங்கிலத்தில் 16.10.2017 அன்று சந்திரிகா அம்மையாருக்கு இந்தக் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்குப் பதிலேதும் வராதமையால் அந்தக் கடிதமும் அதன் மொழிபெயர்ப்பும் ஊடகங்களுக்கு அனுப்பப்படுகின்றன' – என்ற குறிப்போடு அந்தக் கடிதத்தை ஊடகங்களுக்குப் பகிரங்கப்படுத்தியிருக்கின்றார் முதலமைச்சரின் ஊடக இணைப்பாளர்.

"மிகவும் பலத்த எதிர்ப்புடன் இக்கடிதத்தைத் தங்களுக்கு எழுதுகிறேன்." – என்ற ஆரம்ப வாசகங்களுடன் வரையப்பட்ட அந்த மடலுக்கு எந்தப்பதிலையும் இற்றைவரை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதுவரை வழங்கவில்லை என்று கூறப்படுகின்றது. (உ)

## இரட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தின் நிலைப்பாடும்' – என்ற தலைப்பில் அந்தச்சங்கம் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:–

தமது வழக்குகளை மீண்டும் தமிழ்பிரதேச நீதிமன்றங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற உடனடிக் கோரிக்கையையும், அவ்வாறு மாற்றப்பட்டதன் பின்பு, தமது வழக்குகளைத் துரிதமாக விசாரித்து முடிவு காண வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்து, அநுராதபுரம் சிறையில் சாகும் வரை உணவுத் துறப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் மூவரின் கோரிக்கைகளை இழுத்தடிப்பின்றி உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்திய வேண்டுகோளானது யாழிலுள்ள பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் மக்கள் அமைப்புக்களால் விடுக்கப்பட்டது. இவர்களுடன் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து கொண்டனர்.

இன்று பல்கலைக்கழக மாணவர்கள் அப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் போது அவர்களுக்கு உதவியையும் ஆதரவையும் வழங்க வேண்டிய பெரும்பொறுப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் கல்விசார் சமூகத்தினருக்கும் நிச்சயம் உண்டு.

எனவே மாணவர்களோடு நாமும் இணைந்து போராட வேண்டியது அவசியம். அவ்வாறு இணைந்து போராடாவிட்டாலும் குறைந்தபட்சம் போராடும் மாணவர்களினது நலன்களைப் பேணும் நடவடிக்கைகளிலாவது ஈடுபடல் அவசியம். அதனை விடுத்து மாணவர்களிற்கு அநாவசியமான அச்சுறுத்தல்களையோ இடைஞ்சல்களையோ ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது.

மாணவர்களின் போராட்டம், அவர்களது கோரிக்கை நியாயம் என ஏற்றுக்கொண்டால் அதனை ஆதரிக்க வேண்டும். மாறாக எவராவது அல்லது எந்த அமைப்புக்களாவது அவர்களது கோரிக்கையோ, போராட்டமோ நியாயமற்றது என்றோ அரசியல் கைதிகளின் விடயத்தில் தாங்கள் மாறான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாகக் கருதினாலோ அவர்கள் தங்களது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படையாக வெளிப் படுத்துதல் வேண்டும். எவரும் ஒருபோதும் இரட்டை நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்க முடியாது.

அந்தவகையில் பல்கலைக்கழக ஊழியர் சங்கமானது ஏற்கனவே பொது அமைப்புக்களுடன் இணைந்து இப்போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தவர்கள், போராடியவர்கள் என்ற அடிப்படையிலும் பல்கலைக்கழக சமூகத்தின் ஓர் அங்கம் என்ற வகையிலும் மாணவர்களின் போராட்டம், அவர்களது கோரிக்கை நியாயம் என ஏற்றுக்கொண்டு அவர்களின் போராட்டத்திற்கு பூரண ஆதரவை வழங்குவதோடு அவர்களுடன் கரம் கோர்க்கின்றோம். – என்று உள்ளது.

# வியாபார நிலையங்களை அகற்றக் கோரி வவுனியாவில் இளைஞர்கள் போராட்டம்!




வவுனியா, நவ. 01

வவுனியா நகர பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள சட்ட விரோத வியாபார நிலையங்களை அகற்றுமாறு கோரி நேற்றுக் காலை 10.30 மணியளவில் வவுனியா இளைஞர்கள்ஒன்றிணைந்துபோராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

வவுனியாவில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள வியாபார நிலையங்களை அகற்றுவதே எமது நோக்கம், இன மதங்களுக்கிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்துவது அல்ல என வவுனியாவில் போராட்டத்தை முன்னெடுத்த தமிழ் இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தவை வருமாறு:-

இனங்களுக்கிடையே, மதங்களுக்கிடையிலான பிரச்சினைகளை ஏற்படுத்துவது எமது நோக்கமல்ல இதை தவறாக அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டாம்.

கடந்த 1995ஆம் ஆண்டு 16 வியாபார நிலையங்களுக்கு அப்பகுதியில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் தற்போது 80இற்கும் அதிகமாக வியாபார நிலையங்கள் சட்ட விரோதமான முறையில் நடைபாதையிலும் பள்ளியை அண்மித்த பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ளன.

வவுனியா நகரசபையில் முன்னர் ஆட்சிபுரிந்த அரசியல் பிரமுகர்கள் இதற்கு அனுமதியளித்துள்ளனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக அதிகாரிகளிடம் குறிப்பாக வீதி அதிகாரசபையிடம் வினவியபோது அரசியல் தலையீடு காரணமாக முன்னர் அவற்றை அகற்ற முடியவில்லை.

எனினும், நடைபாதையில் வியாபார நிலையங்களை அகற்றுமாறு கோரிக்கை விடுப்பதுடன், அகற்றும் வரை எமது போராட்டத்தைத் தொடருவோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.



இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு வவுனியா நகர சபைச் செயலாளர் ஆர். தயாபரன் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளார்.

இச்சம்பவம்வீதி அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபையிடமே உள்ளது எனவும் இந்த விடயமாக தலையிடுவதற்கு தனக்கு அதிகாரம் இல்லை, ஆனால் இன்று இடம்பெற்ற போராட்டம் தொடர்பாக வீதி அதிகார சபையினருக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபையினருக்கும் கடிதம் ஒன்றை அனுப்ப முடியும்எனத்தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து போராட்டம் மேற்கொண்ட இளைஞர்களால் நகரசபை செயலாளருக்கு சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட வியாபார நிலையங்கள் தொடர்பாக மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

# யானைத் தந்தங்கள் படையினரால் மீட்பு!



வவுனியா, நவ. 01

இலங்கையின்வடக்கே வவுனியா மாவட்டம், பூவரசங்குளம் பகுதியில் மூன்று யானைதந்தங்கள் விசேட அதிரடிப்படையினரால்மீட்கப்பட்டுள்ளன அதனை வைத்திருந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, பூவரசங்குளம், குருக்களூர் புதுக்குளம் பகுதியில் யானைத் தந்தம் வைத்திருக்கின்றனர் என விசேட அதிரடிப் படையினருக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைத்துள்ளது.



இதனையடுத்து விரைந்து செயற்பட்ட அதிரடிப்படையினர், அந்தஇடத்திற்குச்சென்று 3 அடி தொடக்கம் 5 அடி வரையிலான 25 கிலோ கிராம் எடையுடைய மூன்று யானை தந்தங்களைக் கைப்பற்றியுள்ளனர் அதனை வைத்திருந்த இரண்டு சந்தேக நபர்களையும் அவர்கள் கைது செய்துள்ளனர்.

இதேவேளை கைப்பற்றப்பட்ட இந்த யானைத் தந்தங்களுடன் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# எரிபொருள் விலை குறையும்?

## தேர்தலை இலக்கு வைத்து நடவடிக்கை

கனியவளக்கூட்டுத்தாபனம் எதிர்வரும் தினத்தில் எரிபொருளின் விலையை குறைக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதையநிலையில், கனியவளக் கூட்டுத்தாபனத்தின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டும் எதிர்வரும் தேர்தல் மற்றும் வரவு - செலவுத் திட்டத்தை இலக்காக வைத்தும் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 26ஆம் திகதி கனியவளக் கூட்டுத்தாபனத்தால் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின்போது, கனியவளக் கூட்டுத்தாபனத்தின் ஒகஸ்ட்மாத இலாபம் 773 கோடி ரூபா எனவும் செப்ரெம்பர் மாதத்தில் அந்தக் கூட்டுத்தாபனத்தின் இலாபம் 963 கோடி ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று இடம்பெற்ற பங்கு மதிப்பாய்வுக் குழுகூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, எதிர்வரும் தினத்தில் விசேடமாக டீசல் மற்றும் பெற்றோலின் விலை குறிப்பிட்டளவில் குறைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# இறைச்சிக் கடையை ஏலம் எடுத்தார் பிக்கு

கொழும்பு, நவ 1

மத்துகம பொதுச் சந்தையில் உள்ள இறைச்சிக் கடை ஒன்றைப் பௌத்த தேரர் ஒருவர் கேள்விப்பத்திரம் மூலம் ஏலத்தில் எடுத்துள்ளார்.

களுபஹன சேலதெலாராமய விகாரையின் விகாராதிபதி மாவிட்ட ஞானரத்ன தேரரே இறைச்சிக்கடையை இவ்வாறு ஏலம் எடுத்துள்ளார். கடந்த 2017ஆம் ஆண்டு குறித்த இறைச்சிக் கடை வர்த்தகர் ஒருவரினால், 22 இலட்சத்து 60 ஆயிரத்து 150 ரூபாவுக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டது. 2018ஆம்ஆண்டுக்காகஅந்தக்கடையைப் பௌத்தபிக்கு 32 இலட்சத்து 25 ஆயிரத்து 622 ரூபாவுக்கு ஏலத்தில் பெற்றுள்ளார்.

இதுதொடர்பில்கருத்துவெளியிட்டுள்ள தேரர், மத்துகம நகரம் தற்போது புனித நகரமாக இருக்கின்றது. இந்த நிலையில் இங்கு இறைச்சிக் கடைகளை மூடுவதற்குப் பௌத்த பிக்குகள் ஒன்றிணைந்து தீர்மானம் எடுத்தோம். அதன்படி பிரதேச



சபை அதிகாரிகளிடம் இது குறித்து தெரிவித்தபோதிலும், நகர நிர்வாகச் சட்டத்திற்கமைய இதுதொடர்பில் தீர்மானமொன்றை எடுப்பதற்கு அவர்களால் முடியவில்லை. இதனால் 2018ஆம் ஆண்டுக்கான கேள்விப் பத்திரத்தின்போது விண்ணப்பித்து, அந்தக் கடையைப் பெற்று மூடுவதற்குத் தீர்மானித்தோம் - என்றார்.

எனினும், ஏலத்தில் எடுக்கப்பட்ட இறைச்சிக்கடையை மூடி வைக்க முடியாது என்றும், அதனை விரைவில் திறக்காவிடின் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பிரதேச சபைச் செயலாளர் கூறினார்.

காலைக்கதிர் Kalaikkathir



# இளைஞர்கள் நால்வர் வாள்களுடன் கைது



யாழ்ப்பாணம், நவ.01

யாழ்ப்பாணம் மடத்தடிப் பகுதியில், வாள்களுடன் நடமாடிய 4 இளைஞர்கள், நேற்று முன்தினம் இரவு, யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.


யாழ்ப்பாணம் பொலிஸாரால், அந்தப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட ரோந்து நடவடிக்கையின்போது, சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய குறித்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து வாள்கள் மீட்கப்பட்டன. குறித்த நால்வரும் யாழ். மடத்தடி, இராசாவின் தோட்டம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.







அரசியல் கைதிகள் விடுதலைக்காக பல்கலை மாணவர் நடத்தும் போராட்டம் தொடர்கிறது.




# கைது செய்யுங்கள்! சிறை செல்லவும் தயார்!

## சாய்ந்த மருது பள்ளிவாசல் தலைவர் தெரிவிப்பு



மறியல் போராட்டத்திலிருந்து ஓர் அடியேனும் பின்வைக்கமாட்டோம். நாங்கள் நியாயத்துக்காக போராடுகிறோம். எங்களது போராட்டத்தைத் தடை செய்யாதீர்கள். வேண்டுமானால் எங்களை கைது செய்து சிறையில் அடையுங்கள். – என்று சாய்ந்த மருது மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் தலைவர் வை.எம். ஹனிபா அம்பாறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் தெரிவித்தார்.

தனி உள்ளூராட்சி சபைக்கோரிக்கையை முன்வைத்து சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் முன்னெடுக்கும் போராட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று வீதிமறியல் போராட்டம் இடம்பெற்றது.

இந்த மறியல் போராட்டத்தை ஒதுங்கி நின்று முன்னெடுத்து போக்குவரத்துக்கு வழிவிடுமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கூறியபோதே, தலைவர் வேண்டுமானால் எங்களைக் கைது செய்யுங்கள் என்று தெரிவித்தார்.





தங்களது கோரிக்கை இன்று, நேற்று முன்வைக்கப்பட்ட ஒன்றல்ல என்று தெரிவித்த அவர், இது யாருக்கும்எதிரானதுஅல்ல என்றும், நியாயங்களை பெற பொலிஸாரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தீர்வு கிடைக்கும்வரை தங்களது போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்று தெரிவித்த அவர், எதிர்காலத்தில் போராட்டம் மேலும் வலுப்பெறும் என்றும் தெரிவித்தார்.


K.T. பிரசாத் வழங்கும்

உலக சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு

மாபெரும் இசை நிகழ்ச்சி

விஷேடமாக சிறுவர், சிறுமியர் தமது பெற்றோருடன், அனைவரும் கலந்து சிறப்பிக்கலாம்.

இடம் : யாழ் / இந்துக்கல்லூரி சபாலிங்கம் மண்டபம்
காலம் : இம்மாதம் 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
நேரம் : மாலை 3:30 மணிக்கு (03.11.2017)

தொடர்புகளுக்கு:
0786125929
077 5504910

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அனுமதி இலவசம்

அனுசரணை வழங்குவோர்

NLB NATIONAL LOTTERIES
NSB National Savings Bank
cecb
PEOPLE'S BANK
PLC பீப்பள்ஸ் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி
இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்
CEYPETCO ENERGIZING THE FUTURE
SPMC
Lanka Sugar Company
SriLankan Airlines


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.11.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.